
பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 08 | வியாழக்கிழமை 25.10.2018 | கதிர் 353

### இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியை முடித்துக் கொண்டு நேற்று புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் தனது முடிவை அறிவித்த நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், நேற்றுக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஒரு கடிதத்தையும் மின் அஞ்சலில் அனுப்பி வைத்தார் என்று பக்கம் 02





# விக்கியின் தலைமையில் தமிழ் மக்கள் கூட்டணி!

## நல்லூரில் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

பெரும் எதிர்பார்ப்புக்கும்,பரபரப்புக்கும் மத்தியில் ‘தமிழ் மக்கள் கூட்டணி’ என்ற தமது புதிய அரசியல் கட்சியை நேற்று நல்லூரில் வைத்து அறிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

கட்சி அமைப்புப் பணிகளை தான் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார். பக்கம் 11

## ஆவா குழுவினருடன் ஆளுநருக்கு தொடர்பு?

### விக்கிக்கு வந்தது சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக். 25

ஆவா குழு போன்ற வன்முறைக் குழுக்களை 3 மாதங்களுக்குள் தன்னால் இல்லாமல் ஒழிக்க முடியும் என்று வடக்கு ஆளுநர் தெரிவித்திருக்கின்றமை பல சந்தேகங்களை எமக்கு ஏற்படுத்துகிறது. ஆளுநரால் 3 மாதங்களுக்குள் பக்கம் 11

## விக்கியை புறக்கணித்த கஜேந்திரகுமார் கட்சி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் ’தமிழ் மக்கள் கூட்டணி’ என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை நேற்று அறிவித்தார். இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்கவில்லை.

சி.வீ. விக்னேஸ்வரன் தமிழ்த் பக்கம் 11

## மழை, காற்று காரணமாக பெரு விருட்சம் சாய்ந்தது



யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணத்தில் நிலவும் மழை மற்றும் காற்று காரணமாக சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதியில் உள்ள மின்சார சபையின் வடபிராந்தியக் காரியாலயம் முன்பாக நின்ற மரம் ஒன்று வீதிக்குக் குறுக்காகச் சரிந்தது. பக்கம் 11

## படை அதிகாரி திருப்பியழைப்பு: கடும் அதிருப்தியில் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 25

மாலியில் ஐ.நா. அமைதி காக்கும் படையிலிருந்த இலங்கை இராணுவ அதிகாரியை திருப்பியழைக்குமாறு ஐ.நா. விடுத்துள்ள வேண்டுகோள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் அதிருப்தி வெளியிட்டார் எனத் தெரியவருகிறது.

இராணுவ அதிகாரி சம்பந்தப்பட்ட விவகாரத்தில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு உள்ள தொடர்பு குறித்தும் ஜனாதிபதி இதன் போது கேள்வி எழுப்பியுள்ளார். பக்கம் 11

## சிறைச்சாலை பஸ்ஸுடன் வான் மோதி இருவர் சாவு

கொழும்பு, ஒக். 25

சிறைச்சாலை பஸ்ஸும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மஹாவ பொலிஸ் பிரிவில் பலகொல்லாகம பிரதேசத்தில் நேற்றுக் காலை இந்த பக்கம் 11

## மலையக மக்களுக்கு ஆதரவாக கிளிநொச்சியிலும் கவனவீர்ப்பு



கிளிநொச்சி, ஒக். 25

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 1000 ரூபாவாக உயர்த்துமாறு வலியுறுத்திக் கிளிநொச்சியில் பழைய மாவட்ட செயலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. பக்கம் 11

## வவுனியா விபத்தில் பெண் காயம்




வவுனியா, ஒக். 25

வவுனியா, குருமன்காட்டு சந்தியில் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த இலங்கைபோக்குவரத்துச் பக்கம் 11

## தமிழர்கள் இருவர் கொழும்பில் கடத்தல்: கடற்படை அதிகாரி கைதாகி மறியலில்

கொழும்பு, ஒக். 25

கடற்படையின் லெப்டினன்ட் கொமாண்டர் சம்பத் தயானந்த குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

2009ஆம் ஆண்டு கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் இரு தமிழர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

2009ஆம் ஆண்டு பக்கம் 11

## தமிழ்த் தேசியச் சிந்தனை அகற்றலை செயற்படுத்தி வருகின்றது நல்லாட்சி

### யாழ். பல்கலை சட்டத்துறைத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 25

தமிழ்த்தலைமைகள் தங்கள் அரசியல் அபிலாசைகளைக் குறைத்துக் கொண்டாலும்கூட, பேரினவாத சக்திகள் அதனை ஏற்கத் தயாரில்லை என யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத்தலைவர் கு.குருபரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய சிந்தனை அகற்றலைக் கடந்த அரசு ஒடுக்குமுறைகளாலும், இப்போதைய அரசு பக்கம் 11

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# தென்கொரிய மாநாட்டில் கஜேந்திரகுமார் பங்கேற்பு




சியோல், ஒக். 25

இராணுவ மயமாக்கலுக்கு எதிரான சர்வதேச மனித உரிமையாளர்கள், மக்கள் செயல்பாட்டாளர்கள் மற்றும் கல்வியலாளர்கள் பங்குபற்றிய கருத்தரங்கில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தித் தமிழ்த் தேசிய மக்கள் முன்னியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டார்.

இந்தக் கருத்தரங்கு கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை தென்கொரியாவில் நடைபெற்றது.

இராணுவமயமாக்கலையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்தல், புனிதம் மிக்க எம் தாய் நிலத்தையும் எம் கடலையும் எம் உயிர்ப்பையும் மீளக் கோருதல் எனும் தொனிப் பொருளில் தென்கொரியத் தலைநகர் சியோலில் நடந்த இந்த சர்வதேசக் கருத்தரங்கு தொடரில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டார்.

இதில் பலஸ்தீனம், காஷ்மீர், மியன்மார், இந்தோனேசியா, தென் கொரியா, துருக்கி, தாய்லாந்து, ஜோர்தான், பசுபிக் தீவுகள், மேற்கு பப்புவா நியுகினி போன்ற நாடுகளின் மக்கள் செயல்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர். (ஐ-100)

# கடற்படையின் அழைப்பை நிராகரித்தன 35 நாடுகள்

கொழும்பு, ஒக். 25

கடற்படையினர் நடத்தும் காலி கலந்துரையாடல் 2018 திங்களன்று கொழும்பில் ஆரம்பமாகியுள்ள நிலையில், இம்முறை இந்த மாநாட்டில் அதிகளவான நாடுகள் கலந்துக்கொள்ளவில்லையெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துக்கொள்வதற்கு 73 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும், 35 நாடுகள் அழைப்பை நிராகரித்துள்ளன எனவும் 38 நாடுகள் கலந்துக்கொண்டிருக்கின்றன எனவும் தெரியவந்துள்ளது.

இம்முறை இம்மாநாட்டில், அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்றுள்ள நிலையில், தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், நோர்வே, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, ஈரான், தென்கொரியா மற்றும் மொறிசியஸ் உள்ளிட்ட நாடுகள் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிளிநொச்சி முதியோர்களின் கௌரவிப்பு நிகழ்வு நாளை

கிளிநொச்சி, ஒக். 25

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகமும் மாவட்ட முதியோர் சங்கமும் இணைந்து நடத்தும் முதியோர் தினவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்டக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் சி.சத்தியசீலன், கௌரவ விருந்தினர்களாகக் கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் தங்கவடிவேல் கிருபாகரன், கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வே.இறைபிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற முதியோர் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பும் நடைபெற உள்ளது. (ஐ)

# போதைப்பொருள் தொடர்பில் தகவல் வழங்க பிரிவு ஆரம்பம்

கொழும்பு, ஒக். 25

போதைப்பொருள் தொடர்பில், நாடளாவிய ரீதியிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் சிறப்பு நடவடிக்கைகள் பிரிவொன்று, பொலிஸ் தலைமையகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதெனத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் பங்குப்பற்றலுடன் இந்தச் சிறப்பு நடவடிக்கைகள் பிரிவு நிறுவப்பட்டுள்ளதென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அதிகாரி ருவன் குணசேகர தெரிவித்தார்.

இந்த சிறப்பு நடவடிக்கைகள் பிரிவுக்கு தகவல்களை வழங்குவோர், 011-3024820, 011-3024840, 011-3024850 ஆகிய தொலைபேசி இலக்கங் கள், 011-2430912, 011-2472757 பக்ஸ் இலக்கங்களுக்கு இன்றேல், sandsandpolice.lk என்ற மின்னஞ்சலின் ஊடாகத் தகவல்களை வழங்கமுடியுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

போதைப்பொருள் தொடர்பில், மிக முக்கியமான தகவல்களை வழங்குபவர்களின் விவரங்கள் பாதுகாக்கப்படுமெனத் தெரிவித் துள்ள பொலிஸ் தலைமையகம், அவ்வாறானவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளது. (ஐ)

# தெல்லிப்பழையிலும் நாளைமறுதினம் சர்வதேச முதியோர் மாத விழா

தெல்லிப்பழை, ஒக்.25

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு, தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை வளாகத்திலுள்ள மேற்படி கழக மண்டபத்தில் சர்வதேச முதியோர் மாத விழா நடைபெறும்.

வடமாகாணத்தில் 100 வயதையும் 90 வயதையும் தாண்டியவர்கள் இவ்விழாவில் சிறப்பித்து கௌரவிக்கப்படவுள்ளனர். நிகழ்வில் 'முதியோர்' 18 ஆவது மலரும் வெளியிடப்படவுள்ளது.

நிகழ்வில் சமயப் பெரியார்கள் மற்றும் பேராசிரியர்கள், பிரமுகர்கள் பலரும் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

சகலரும் வருகைதந்து நிகழ்வுகளிலும் மதிய போசன விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு கழகத் தலைவர் க.கணேசமூர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்.

# மலையகத்தில் மின்னல் தாக்கி 5 பெண்கள் வைத்தியசாலையில்

பொகவந்தலாவை பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் ஐந்து பெண்கள், பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் பொகவந்தலாவை – மோரா தோட்டத்தில் வேலை பார்த்துகொண்டிருந்த பெண்கள் ஐவரே இவ்வாறு மின்னல் தாக்கத்துக்குட்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மன்னாரில் போசனைக் கண்காட்சி

மன்னார், ஒக். 25

மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வங்காலை புனித ஆனாள் மகா வித்தியாலய பாடசாலையில் நேற்று போசனைக் கண்காட்சி இடம்பெற்றுள்ளது.

நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் வேல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்தக் கண்காட்சி இடம்பெற்றது.



இந்தக் கண்காட்சியில் இளம் வயதினருக்கான பராமரிப்பு, கர்ப்பம் தரித்தல் தொடக்கம் குழந்தை பிறந்து 5 வயது வரையான பூரண சுகாதாரம், சுற்றுச் சூழல் சுகாதாரமும் நுளம்புக் கட்டுப்பாடும், கழிவு முகாமைத்துவம், உள நலம், பற்சுகாதாரம் போன்ற பல்வேறு பயனுள்ள விடயங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்தக் கண்காட்சியுடன் வடக்கு-கிழக்கு மாவட்ட கேன் அமைப்பினால், புற்றுநோய் மற்றும் எயிட்ஸ் தொடர்பான பூரண மருத்துவப் பரிசோதனை முகாமும் இடம்பெற்றது. (ஐ)


சர்வதேச முதியோர் மாத நிகழ்வை முன்னிட்டு

வடமாகாணத்தில் 100,90 வயதிற்கு மேற்பட்டோர்களை கௌரவித்து முதியோர் மலர் வெளியிடும் நிகழ்வு

காலம் : 26.10.2018 - வெள்ளிக்கிழமை

நேரம் : முற்பகல் 9.30 மணி

இடம் : தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான ஆலய முன்பாக உள்ள இலங்கை முதியோர் சுக வாழ்வுக்கழக மண்டபம்

தொடர்புகளுக்கு:

தலைவர் : 077 606 8656

செயலாளர் : 077 663 6596

அனுசரணை: POSSIBLE GREEN (Pvt)Ltd


## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிய வந்தது.

தன்னை முதலமைச்சர் பதவிக்குத் தெரிவு செய்தமைக்கும், அந்தப் பதவியில் முழுப் பதவிக் காலமும் தாம் தொடர்வதற்கு வாய்ப்பளித்தமைக்கும் சம்பந்தனுக்கு நன்றி தெரிவித்த நீதியரசர் விக்னேஸ்வரன், தனித்து அரசியல் பயணம் செய்யும் முடிவுக்குத் தான் வந்திருக்கின்றமை பற்றிய தீர்மானத்தையும் தமக்கேயுரிய பாணியில் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தக் கடிதத்துக்கு சம்பந்தனின் பிரதிபலிப்பு என்னவென்பதை உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

★ ★ ★

உத்தேச புதிய அரசமைப்புத் தொடர்பில் நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட மாதிரி அரசமைப்புக்கான வடிவத்தை அங்கீகரிப்பதற்காக அரசமைப்பு வழிகாட்டல் குழு இன்று கூடுகின்றது.

இன்றைய கூட்டத்தில் அங்கீகரித்து, அடுத்த 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தை அரசமைப்புப் பேரவையாகக் கூட்டி அதில் அதனைச் சமர்ப்பிப்பதற்குப் பிரதமரும் ஏனைய தரப்பினரும் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

ஆனால், ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவனாந்தா மூலம் 'ஏக்கிய ராஜ்ஜிய', 'ஒற்றையாட்சி' என்ற மொழி பெயர்ப்புச் சர்ச்சையை இன்றைய அமர்விலும் சூடாக்கி, இன்றும் விடயத்தை முடித்துக்கொள்ள விடாமல் இழுத்தடிக்க வைப்பதற்கு எதிரணித் தரப்பு தயாராகி வருவதாகத் தெரிகின்றது.

இதனால், இன்றும் வழிகாட்டல் குழுவில் சம்பந்தன், சுமந்திரன் ஒரு பக்கமாகவும் டக்ளஸ் தேவானந்தா மறுபக்கமாகவும் சாட்டையைக் கிளப்புவர் என எதிர்பார்க்கலாம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிலைமையை எப்படிச் சமாளித்துத் தனது திட்டத்தை எப்படி ஒப்பேற்றுவர் என்பதைப் பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.

- மின்னல் -

# தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் விரிவடைகிறது

## கொழும்பில் கறுப்புச் சட்டைக் கவனவீர்ப்பு



கொழும்பு, ஒக். 25

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்த வலியுறுத்தி, கொழும்பில் நேற்று மாபெரும் மக்கள் போராட்டம் நடத்தப்பட்டது.

கறுப்புச்சட்டைப் போராட்டம் என அழைப்பு விடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் கொழும்பு காலி முகத்திடலில் நேற்று முற்பகல் ஆரம்பமாகி நடைபெற்றது. இதில் பெருந்திரளானோர் பங்கேற்று பெருந்தோட்டத்தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி கோஷங்களை எழுப்பினர்.

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டம் காரணமாக லோட்டஸ் வீதி, செரமிக் சந்தி முதல் காலிமுகத்திடல் வரை மூடப்பட்டது.

நுவரெலியா – கந்தப்பளை நகரிலும் பெருந்தோட்டத்தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்லொஜ், சமர்ஹில் டிவிசன், போர்ட்ஸ்வுட் டிவிசன், பார்க் எஸ்டேஸ், கொங்கோடியா, கந்தப்பளை டிவிசன் மற்றும் எஸ்கடேல் டிவிசனைச் சேர்ந்த மக்கள் இந்த கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கந்தப்பளை நகரில் கடைகளை அடைத்து வர்த்தக சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்கினர். அதேநேரம், ஹட்டன் நகர வர்த்தகர்களும் நகரை அண்மித்த தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

மல்லியப்பூச் சந்தியில் இருந்து பேரணியாகச் சென்ற மக்கள் நகர மத்தியில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் உள்ள வீதியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (ஐ)

### ஜனாதிபதி கொலைச் சதி;

# கைதாகிய இந்தியரின் உயிருக்கு அச்சுறுத்தல்!

கொழும்பு, ஒக். 25

குற்றப் புலனாய்வுப் பிரிவின் காவலில் உள்ள தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக இந்தியரான மெர்சலின் தோமஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால, முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஆகியோரைப் படுகொலை செய்யச் சதித் திட்டம் தீட்டப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, இந்தியரான மெர்சலின் தோமஸ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் சிறப்பு வாக்குமூலம் ஒன்றை வழங்கினார்.

அப்போது அவர், குற்றப் புலனாய்வுப் பிரிவின் காவலில் உள்ளபோது தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்தார்.

இதையடுத்து, அவரை எழுத்து மூலம் முறைப்பாட்டைத் தெரிவிக்குமாறு நீதிவான் லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டார்.

அதேவேளை, அன்றைய விசாரணைகளின்போது, குற்றப் புலனாய்வுப் பிரிவினர், ஜனாதிபத்யைக் கொல்லச் சதி என்ற குற்றச்சாட்டை வெளிப்படுத்திய நாமல் குமார மற்றும் பயங்கிரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் தலைவரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா ஆகியோரின் குரல் சோதனை தொடர்பான அறிக்கையைத் தாக்கல் செய்தனர்.

நாலக சில்வாவுக்கும், நாமல் குமாரவுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் தொடர்பான 124 ஒலிப்பதிவுகளில், 123 ஒலிப்பதிவுகள், அவர்களின் குரல் பதிவுகளுடன் ஒத்துப்போவதாகக் கண்டறியப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# வீதிக்கு வந்த யானையால் புளியங்குளத்தில் பரபரப்பு



வவுனியா, ஒக். 25

வவுனியா, புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீதிக்கு வந்த யானையால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். அத்துடன் அங்கு பரபரப்பான நிலையும் ஏற்பட்டது.

புளியங்குளம் – நெடுங்கேணி வீதிக்கு வந்தது யானை ஒன்று. இதனால் அந்த வீதி வழியாகப் போக்குவரத்துச் செய்த பயணிகள், வாகனச் சாரதிகள், வேலை முடிந்து வீடு திரும்பிய அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

அவ்வப்போது மாலை வேளைகளில் இந்த வீதிக்கு யானை வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்கின்றனர் எனத் தெரிவித்தனர். (ஐ-100)

# பிரதேச செயலாளரான தமிழரை தாக்க முயன்றார் பௌத்த பிக்கு

## அரச மரக்கிளைகளை வெட்ட அனுமதித்தால் ஆவேசம்



மட்டக்களப்பு, ஒக். 25

மட்டக்களப்பு செங்கலடி ஏறாவூர்பற்றுப் பிரதேச செயலாளர் வில்வரட்ணத்தைப் பௌத்த பிக்கு ஒருவர் தாக்க முற்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

மயிலம்பாவெளி பிரதான வீதியில் உள்ள மீள்குடியேற்ற காணியில் இருந்த அரச மரம் ஒன்றின் கிளைகளை வெட்டுவதற்கு அனுமதி வழங்கியதாகக் கூறி நேற்று முன்தினம் நண்பகல் அவ்விடத்திற்குச் சென்ற செங்கலடிப் பிரதேச செயலாளர் வில்வரெட்ணத்தை, அங்கு நின்ற மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரர் தகாத வார்த்தைகளால் ஏசியதுடன் அவரைக் கன்னத்தில் அறைவதற்கு முற்பட்டார்.

பிரதேச செயலரைத் தாக்க முற்பட்ட தேரரைப் பொலிஸார் தடுத்துள்ளனர். இந்தச் சம்பவம் அந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மயிலம்பாவெளி பிரதான வீதியில் கடந்த 30 வருடங்களாக இராணுவ முகாமாக இருந்த பிரதேசம் தற்போது விடுவிக்கப்பட்டு அங்கு காணி உரிமையாளர்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் பொது மக்களின் காணியில் இராணுவத்தினர் வைத்து வழிப்பட்ட சிறிய புத்த கோயில் ஒன்றும் அதன் அருகில் பெரிய அரச மரம் ஒன்றும் உள்ளன.

அரச மரத்தின் கிளைகள் மின்சாரக் கம்பிகளில் மோதி குடியிருப்போருக்கு அச்சுறுத்தலாக இருந்த நிலையில், பிரதேச செயலாளர் மற்றும் வனவளப் பரிபாலன சபையினரின் சட்ட ரீதியான அனுமதிகளைப் பெற்று காணி உரிமையாளர்கள் அரச மரத்தின் சில கிளைகளை வெட்டியுள்ளனர்.

இந்த நிலையில் அரச மரத்தின் கிளைகளைச் சட்ட ரீதியாக வெட்டிய காணி உரிமையாளர்களை மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரர் கைது செய்யுமாறு ஏறாவூர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

சம்பவ இடத்தில் கலகத்தில் ஈடுபட்ட மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி, அரச மரத்தை வெட்ட அனுமதி வழங்கிய பிரதேச செயலாளரைச் சம்பவ இடத்திற்கு வருமாறு வற்புறுத்தினார். இதனையடுத்து அங்கு சென்ற செங்கலடி பிரதேச செயலாளருடன் அம்பிட்டிய சுமனரத்தின தேரர் இவ்வாறு நடந்துள்ளார். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ஐ)

# மஹிந்தவைப் பிரதமராக நியமிக்கும் யோசனைக்கு சுதந்திரக்கட்சி எதிர்ப்பு



கொழும்பு, ஒக். 25

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்து புதிய அரசை அமைக்கக் கூட்டு எதிரணியினர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி விடுத்த கோரிக்கையைத் தாம் நிராகரித்துள்ளனர் என அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று வழங்கிய நேர்காணல் ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவைப் பிரதமராக நியமித்து புதிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக கூட்டு எதிரணி மற்றும் சுதந்திரக் கட்சியின் 15 பேர் அணியினர் பல யோசனைகளை முன்வைத்திருந்தனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அந்த யோசனைகளை நிராகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# மக்கள் வங்கியின் புதிய தலைவராக சுஜாதா குரே

கொழும்பு, ஒக். 25

மக்கள் வங்கியின் புதிய தலைவராக சுஜாதா குரே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளராகவும், நிதி அமைச்சின் உதவிச் செயலாளராகவும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் குழு உறுப்பினராகவும் சில அரச மற்றும் தனியார் வங்கிகளின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இவர் முன்னர் செயற்பட்டுள்ளார்.

அத்துடன், சம்பளம் மற்றும் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் அவர் உள்ளார். (ஐ)

# 2019 முதல் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, ஒக். 25

2019 ஆம் ஆண்டு முதல் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க விவசாய அமைச்சு முடிவு செய்துள்ளது.

சந்தையில் அரிசிக்கு நிலையான விலையைப் பேணும் நோக்கத்துடனேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அரிசிக்குச் சந்தையில் தற்போது இருக்கின்ற விலையை விட 10 ரூபாவைக் குறைக்க ஆலை உரிமையாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதற்கிடையில், அடுத்த மாதம் முதல் பி.எம்.பீ. அரிசி என்ற அரிசி வகையை விற்பனை செய்ய நெல் விநியோக சபை திட்டமிட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## சாணக்கியம், ராஜதந்திரம் பட்டறிவில் புரிய வரும்

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனின் நிலைப்பாடு, அரசியல் போக்கு, எதிர்காலத் திட்டம் யாது என்பது தெளிவாகிவிட்டது.

நேற்று வடக்கு முதலமைச்சர் கதிரையிலிருந்து – பதவியிலிருந்து – புறப்பட முன்னர் தமது திட்டத்தை அவர் அம்பலப்படுத்தி விட்டார்.

இதோ வருகின்றது, வருகின்றது என எதிர்பார்க்கப்பட்ட அறிவிப்பு வந்துவிட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியை, உத்தியோக பூர்வமாகத் தமிழ்க் கூட்டமைப்பைப் பிளக்காமல், உடைக்காமல், அதற்குள் இருந்தபடியே ஆண்டனுபவித்து, அதன் முடிவில் தமது திட்டத்தை அவர் அறிவித்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, மக்கள் அவர்களுக்குக் கொடுத்த ஆணைப்படி செயற்பட்டிருந்தால் – அவர்கள் வரித்துக் கொண்டதாகக் கூறப்படும் கொள்கைகளுக்கு அவர்கள் விசுவாசமாக இதுகாறும் நடந்து கொண்டிருந்தால் – தான் அரசியலில் இருந்து ஒய்வு பெற்றுப் போயிருப்பார் என்றும் –

ஒரு கட்சியை உருவாக்கக் கூட்டமைப்பினர் தன்னைக் கட்டாயப்படுத்தி விட்டார்கள் என்றும் –

நீதியரசர் விக்னேஸ்வரன் கூறியிருக்கின்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தலைவர் பிரபாகரன் பற்றியும் சிந்திப்பது பொருத்தமானது. 'இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி' என்றார் தேசியத் தலைவர்.

அவரது இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் – பாதையில் – ஒரு திட்டவட்டமான செல்நெறி வரைபடம் இருந்தது. ஆயுதவழிப் போராட்டம் மூலம் தமது மண்ணையும், மக்களையும், இனத்தின் சுதந்திர விடுதலையையும் மீட்கலாம் என்று அவர் நம்பினார். அந்த நம்பிக்கையில் – தாம் வரித்துக் கொண்ட பாதையில் – பற்றுறுதியுடனும், திடசங்கற்பத்துடனும் இம்மியளவும் பிசகாமல் அவர் செயற்பட்டார். கொள்கைப் பற்றுறுதியில் எஃகு போல – அசையாத இமயம் போல – மிக மிக உறுதியாக இருந்தார். தாம் வரித்துக் கொண்ட பாதையில் உறுதியாக இருந்தவர் என்று உலகம் காட்டும் உதாரண புருஷராகவே அவர் விளங்கினார்.

இலங்கைத் தீவில் ஆகப் பன்னிரண்டு சதவீதமே கொண்ட ஒரு மக்கள் கூட்டத்திலிருந்து முகிழ்ந்த ஆயுதப் போராட்ட இயக்கத்தை வைத்துக் கொண்டு மரபுவழி இராணுவம், விமானப்படை, கடற்படை என முப்படைகளையும் அமைத்து, உலகையே பொறிகலங்கடிக்கும் போரியல் சாதனைகளை செய்து காட்டிய மாவீரர் அவர்.

ஆனால், சர்வதேச அரசியலின் செல்நெறி மார்க்கத்தைப் புரிந்துகொண்டு – யதார்த்தக் களச் சூழலை உணர்ந்து கொண்டு – அதற்கேற்ப தமது விடுதலைப் போராட்டப் பாதையை சாணக்கியத்தோடும், ராஜதந்திரத்தோடும் மாற்றியமைக்காமல், வளைந்து கொடுக்காமல், விடாப்பிடியாகத் தமது கொள்கைப் பற்றுறுதியில் இரும்பு போல நின்ற காரணத்தினால்தான், சர்வதேசத்தையும் பகைத்து, இத்தகைய வியத்தகு போராட்ட வெற்றிகளின் பின்னரும், அந்தப் போராட்டமே அடியோடு முறியடிக்கப்படும் அவல நிலையைப் புலிகளின் தலைவர் சந்திக்க வேண்டியவரானார் என்ற விமர்சனம் நம் மத்தியில் உண்டு.

'வரலாறு எனது வழிகாட்டி' என்று கூறிய தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் போல 'எமது இனத்தின் வரலாறு எனக்கு வழிகாட்டும்' என்று நீதியரசர் விக்னேஸ்வரனும் கூறுகின்றார்.

சிலசமயங்களில், 'இவருக்கு வரலாறே தெரியாது' என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கூறிய விமர்சனத்துக்கான பதிலாக இந்த 'வரலாறு வழிகாட்டும்' என்ற கருத்தை அவர் இந்த உரையிலே கூறினாரோ என்னவோ தெரியவில்லை.

ஆனாலும், கொள்கை, இலட்சியம், மக்கள் ஆணை, ஒரே இலக்கு என்று எதை வகுத்துக் கொண்டாலும் கூட, கள யதார்த்தங்களையும், உலகப் போக்குகளையும், சர்வதேச அரசியல் மாற்றங்களையும், சாத்தியமான இயலுமைகளையும் புரிந்து கொண்டு சாணக்கியத்துடனும், ராஜதந்திரத்துடனும் நடந்து கொள்வதும், அத்திசையில் தந்திரத்தோடு மக்களை ஒன்றிணைத்து வழிப்படுத்துவதும் கூட ஓர் அரசியல் தலைவனின் தலையாய கடமைதான்.

உலகப்போக்கின் செல்நெறியைப் புரிந்து கொள்ளாமல் – அல்லது புரிந்து கொள்ள மறுத்து – சாத்தியமானவற்றின் எல்லைகளை உய்த்துணராமல் – கொள்கைப் பிடிப்பில் மட்டும் ஒரேயடியாக ஊறிப் பிடிவாதமாக நின்று. அரசியல் நிலைப்பாட்டை எடுத்ததன் விளைவை நாம் ஏற்கனவே பட்டறிவாகப் படித்துள்ளோம்.

இனத்தின் நலன் என்ற இலக்கை அடைவதற்காக, தேவைப்படும் சமயங்களில் 'சாணக்கியம்', 'ராஜதந்திரம்' என்ற ஆடைகளை அணிவது தவிர்க்க முடியாதது என்பதை இந்த அரசியல் விடயங்களை நேரடியாகக் கையாளும் நிலைமை வரும்போது – அதற்கான பொறுப்பு அவர் தலையில் சுமத்தப்படும் போது – அனுபவம் நீதியரசருக்குப் புகட்டும் என்று நினைக்கிறோம்.

# கேப்பாபிலவுக் காணி விடுவிப்பு மேல்மட்டத்தினரின் கைகளிலாம்

## கூட்டத்தில் தெரிவித்தது படைத் தரப்பு

முல்லைத்தீவு, ஒக். 25

கேப்பாபிலவுக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் மேல் மட்டத்துடன் பேசுமாறு படைத் தரப்பினர் நேற்று முன்தினம் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வடக்கு ஆளுநர் தலைமையில் நடந்தது.

இதன்போதே படைத்தரப்பு இந்தத் தகவலை வெளியிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு மக்களின் காணிகள் ஒட்டுமொத்தமாக விடுவிக்கப்பட வேண்டும் என்று மக்கள் பிரதிநிதிகளால் இங்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கேப்பாபிலவு பாடசாலை விடுவிக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, இந்த விடயத்தை மேல்மட்டத்திற்கு கொண்டு செல்லவேண்டும் என்று படை அதிகாரிகள் கூறினர்.

இந்தவிடயம் ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு சிபார்சு வைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன் தெரிவித்தார். (ஐ)

# தேசிய பாதுகாப்புக்கு நாம் எதிரானவர்களே அல்லர்!

## கூறுகின்றார் சாந்தி எம்.பி.



முல்லைத்தீவு, ஒக். 25

நாங்கள் தேசிய பாதுகாப்புக்கு எதிரானவர்கள் அல்லர். எனினும் மக்களின் காணிகளையே நாங்கள் கேட்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

காணிப்பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தக் கூட்டத்தில் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக கலந்துரையாடியபோது, படையினர், கடற்படையினர் மிகவும் கோபமாகக் காணப்பட்டனர். ஏதோ தங்கள் சொத்தை நாங்கள் கேட்பதுபோல் அவர்களுக்கு உணர்வு இருந்தது. எங்கள் மக்களின் சொத்துக்களை, மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த – அவர்கள் உரிமைக்கான ஆவணங்களை வைத்துள்ள – காணிகளை விட்டுத்தாருங்கள் என்றுதான் கேட்கின்றோம். நாங்கள் தேசிய பாதுகாப்புக்கு எதிரானவர்கள் அல்லர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது தலைவிரித்தாடுகின்ற மகாவலி அபிவிருத்தி, தொல்பொருள்திணைக்களம், வனவளத்திணைக்களம் ஆகியவற்றுக்காக உருவாக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் எங்கள் காணிகள் பறிக்கப்படுகின்றன. இதனை முன்னிரிமைப்படுத்தி ஆராயவேண்டும்.

வர்த்தமானி அறிவித்தலால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஏற்படும் அவல நிலையை தடுப்பதற்கு ஆவன செய்வோம். – என்றார். (ஐ-70)

# செய்தியாளர்களை வெளியேற்றிய ஆளுநர் வேடிக்கை பார்த்தனர் தமிழ் எம்.பிக்கள்!





முல்லைத்தீவு, ஒக். 25

அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது.

இதன்போது அங்கு செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை ஆளுநர் அங்கிருந்து வெளியேற்றினார். இதனைக் கூட்டத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்கள் வேடிக்கை பார்த்திருந்தனர்.

கூட்டத்துக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டு அவர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர். சுமார் ஒரு மணித்தியாலத்துக்கும் மேல் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரித்தனர்.

ஆயினும் இராணுவத் தரப்பில் காணி விடுவிப்புக்கள் தொடர்பில் சாதகாமான முடிவுகள் அங்கு வழங்கப்படவில்லை.

முக்கிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்படும் வேளை ஊடகவியலாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு ஆளுநரின் செயலாளர் பிரேமசிறி தெரிவித்தார். ஆயினும் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பில் தொடர்ந்தும் ஈடுபட்டனர். இதன்போது ஊடகவியலாளரின் கமெராவை அகற்றுமாறும், இல்லை எனில் அதைத் தான் அகற்றுவேன் எனவும் பிரேமசிறி அச்சுறுத்தினார்

பின்னர் ஆளுநரிடம் சென்று விடயத்தைக் கூறினார். இதனை அடுத்து ஊடகவியலாளர்களை வெளியில் செல்லுமாறு ஆளுநர் பணித்தார்

இந்த நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்டோர் வேடிக்கை பார்த்தனர். (ஐ-70)

**நாளை**

26.10.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: பரணி மு.ப. 10.52 வரை
திதி :துதியை மு.இ. 9.38 வரை
சுபநேரம் : 6.03 – 7.33 வரை
இராகுகாலம் : 10.33 – 12.03 வரை

# அணு ஆயுதங்களை அமெ. தயாரிக்கும்!

## அதிபர் டிரம்ப் அதிரடி அறிவிப்பு

வொஷிங்டன், ஒக்.25

அமெரிக்கா மீது அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் என ஜனாதிபதி டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், வொஷிங்டனில் நிருபர்களுக்கு திங்களன்று பேட்டி அளித்தார்.

அப்போது அவர், நடுத்தர தூர அணு ஆயுத ஒப்பந்தத்தை மீறி ரஷ்யா செயல்பட்டுள்ளது. இதனால் அந்த ஒப்பந்தத்தில் இருந்து நாங்கள் விலகுவோம். அமெரிக்கா தனக்கான அணு ஆயுதங்களைத் தயாரிக்கும். அணு ஆயுதங்களைக் கொண்டு விளையாட விரும்புகிற சீனா, ரஷ்யா உள்ளிட்ட எவருக்கும் விடப்படுகிற அச்சுறுத்தலாக இது அமைகிறது என்று கூறினார்.

நடுத்தர தூர அணு ஆயுத ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரொனால்ட் ரீகனுடன் கையெழுத்து போட்ட சோவியத் ரஷ்யாவின் முன்னாள் அதிபர் மிக்கேல் கொர்பச்சேவ் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர், நடுத்தர தூர அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகும் முடிவு, அணு ஆயுதங்களை கை விட வேண்டும் என்ற முடிவில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடும்



என்று எச்சரித்தார். டிரம்பின் முடிவு வருந்தத்தக்கது என்று ஜேர்மனியின் வெளியுறவு மந்திரி ஹெய்கோ கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்ய அதிபர் மாளிகை செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கருத்து தெரிவிக்கையில், இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவது, ரஷ்யாவைத் தனது சொந்தப்பாதுகாப்பை பார்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வைத்துவிடும் என்று எச்சரித்துள்ளார்.

# ஸ்டீபன் ஹாக்கிங்ஸின் பொருள்கள் ஏலத்தில்!



மறைந்த இயற்பியல் விஞ்ஞானியான ஸ்டீபன் ஹாக்கிங்ஸின் சக்கர நாற்காலி, ஆய்வறிக்கைகள் உட்பட 20 பொருள்கள் ஏலம் விடப்பட உள்ளன.

ஒன்லைன் மூலம் நடைபெறும் இந்த ஏலம் குறித்து நேற்று (திங்கட்கிழமை) கிரிஸ்ட் ஏல நிறுவனம் அறிவித்தது. இந்த ஏலத்தில் ஸ்டீபன் ஹாக்கிங்ஸின் இருபது பொருள்கள் இடம் பெற இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஸ்டீபன் வாழ்வில் பெரும்பகுதியைச் செலவிட்ட சக்கர நாற்காலிகள் மற்றும் அவரது புகழ்பெற்ற ஆய்வறிக்கைகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பொருள்கள் சுமார் 1,30,000 டொலரிலிருந்து 1,95,000 டொலர் வரை ஏலம் போகும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக இயற்பியலாளரும், உலக அளவில் அதிக அளவில் விற்ற நூல்களின் ஆசிரியருமான ஸ்டீபன் ஹாக்கிங்ஸ் மார்ச் மாதம் காலமானார்.

தனது சக்கர நாற்காலியில் இருந்தபடி 'காலத்தின் சுருக்கமான வரலாறு: பெருவெடிப்பிலிருந்து கருந்துளைகள் வரை' (எப்ரீஃப் ஹிஸ்டரி ஓஃப் டைம்: ஃப்ரம் பிக் பேங் டு ப்ளாக் ஹோல்ஸ்') போன்ற புகழ்மிக்க நூல்களை எழுதியவர் ஸ்டீபன் ஹாக்கிங்ஸ். இந்த நூல்கள் ஒரு கோடி பிரதிகளுக்கும் மேல் விற்பனையாகி சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

# கசோகி கொலையுடன் தொடர்புடைய சவுதி அதிகாரிகளின் அமெ. விசா ரத்து




வாஷிங்டன், ஒக்.25

சவுதி பத்திரிகையாளர் ஜமால்வ் கசோகி கொலையில் தொடர்புடைய சவூதி அரேபிய அதிகாரிகளின் விசா ரத்து செய்யப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வந்த சவுதி அரேபியப் பத்திரிகையாளர் ஜமால் கசோகி (வயது 60), துருக்கியில் உள்ள இஸ்தான்புல் சவுதி அரேபிய தூதரகத்துக்கு கடந்த 2ஆம் திகதி சென்றார். அவர் அங்கிருந்து திரும்பவில்லை. அவர் காணாமல் போய் 17 நாள்களுக்குப் பிறகு அவர் கொல்லப்பட்டு விட்டார் என் சவுதி அரேபியா ஒப்புக்கொண்டது.

சவுதி அரேபிய மன்னராட்சியையும், பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானையும் கடுமையாக விமர்சித்து வந்த ஜமால் கசோகி கொல்லப்பட்டமை உலகை உலுக்கி உள்ளது. இதில் வெளிப்படையான, நம்பத்தகுந்த விசாரணை நடத்த வேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இதற்கிடையே கசோகி படுகொலை தொடர்பான விசாரணையில் அமெரிக்கா நேரடியாக துருக்கியில் களம் இறங்குகிறது. அமெரிக்க மத்திய புலனாய்வு படை சி.ஐ.ஏ.யின். இயக்குனர் ஜினா காஸ்பெல் துருக்கி விரைந்தார். அவர் நேரடியாக விசாரணை நடத்தி ஜனாதிபதி டிரம்பிடம் அறிக்கை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கையில் அவர் கசோகி படுகொலையின் பின்னணியை அம்பலப்படுத்துவார் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

துருக்கி நாடாளுமன்றத்தில் அதிபர் எர்டோகன் நேற்று பேசினார். அப்போது அவர் கசோகி படுகொலை விசாரணை குறித்த உண்மைகளை வெளியிட்டார். அவர் கசோகி படுகொலை செய்யப்படுவதற்கு முன்பாக சவுதி அரேபிய தூதரகம் அருகேயுள்ள காட்டினை சவுதி அரேபிய ஏஜெண்டுகள் பார்வையிட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். இந்த காட்டில்தான் கசோகியின் உடல் வீசப்பட்டிருக்கலாம் எனக் கருதி துருக்கி அதிகாரிகள் தேடுதல் வேட்டை நடத்தினர். இதற்கிடையில் கசோகியின் உடல் பாகங்கள் சவூதி அரேபிய தூதரக அதிகாரியின் வீட்டில் கிடைத்து இருக்கின்றன என்று இங்கிலாந்து நாட்டு தொலைக்காட்சி செய்தி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி கொலையில் தொடர்புடைய சவூதி நாட்டவர்களின் விசாவை ரத்து செய்ததாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட சிலரைத் தாங்கள் அடையாளம் கண்டுள்ளனர் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பொம்பியோ குறிப்பிட்டுள்ளார்

# ஒபாமவுக்கும் கிலாரிக்கும் வெடிகுண்டுப் பார்ஸல்கள்!





நியூயோர்க், ஒக்.25

அமெரிக்க முன்னாள் அதிபர் பாரக் ஒபாமா மற்றும் அவருடைய அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த கிலாரி கிளிண்டனுக்கு வெடிகுண்டு பார்ஸல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் மிக முக்கிய பிரமுகர்களுக்கு அனுப்பப்படும் பார்ஸல்கள் உளவுப்படை பொலிஸாரி சோதித்த பின்னரே அவர்களிடம் ஒப்படைக்கப்படும். இந்நிலையில் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரும் தற்போதைய அதிபரான டிரம்ப்பை எதிர்த்து போட்டியிட்டவருமான ஹிலாரி கிளிண்டன் ஆகியோருக்கு அவர்களின் அலுவலக முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட வெடிப்பொருள் பார்ஸல்களை இடைமறித்து, அமெரிக்க உளவுப்படையினர் கைப்பற்றினர்.

அந்த பார்ஸல்களில் இருந்த வெடிப்பொருள் அமெரிக்காவின் பிரபல கோடீஸ்வரர் ஜோர்ஜ் சோரோஸ் வீட்டில் கடந்த திங்கட்கிழமை கண்டெடுக்கப்பட்ட வெடிப்பொருள்களை ஒத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கிருந்து அவர்களுக்கு இந்தப் பார்சல் அனுப்பப்பட்டது என்பது தெரியவந்துள்ளது எனவும், விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த வெடிகுண்டு தாக்குதல் முயற்சிக்கு வெள்ளை மாளிகை கண்டனம் தெரிவித்துள்ளது. இச்சம்பவம் நியூயோர்க் நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# பத்திரிகையாளர் கசோகி படுகொலை மிகமோசமான மூடிமறைத்தல் முயற்சி

## எரிச்சலின் உச்சத்தில் அமெ. அதிபர் காட்டம்

சவுதி தூதரகத்தில் பத்திரிகையாளர் கசோகி கொலை சம்பந்தமான விடயங்களினால் கடும் எரிச்சல் அடைந்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இந்த விவகாரம் மூடிமறைத்தல் முயற்சிகளில் மிகமோசமான மூடிமறைத்தல் என்று குறிப்பிட்டமையுடன், ஆனல் அது பெருங்குழப்பத்தில் முடிந்துவிட்டது என்றும் கூறியிருக்கின்றார்.

தமது ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிடகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி தூதரகத்தில் பத்திரிகையாளர் கசோகி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் அமெரிக்கா நேரடியாக விசாரணையில் இறங்கி உள்ளது. சி.ஐ.ஏ. இயக்குனர் அங்கு விரைந்தார்.

சவுதி அரேபிய மன்னராட்சியையும், பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானையும் கடுமையாக விமர்சித்து வந்த ஜமால் கசோகி கொல்லப்பட்டமை தொடர்பில் வெளிப்படையான, நம்பத்தகுந்த விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. முதலில் ஜமால் கசோக்கி படுகொலையில் சவுதி அரேபியாவின் தகவலை ஏற்ற அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், இப்போது இதில் பல்டியடித்துள்ளார்.

சவுதி அரேபியாவின் தகவல்கள் தனக்கு திருப்தி அளிக்கவில்லை என்று அவர் வாஷிங்டனில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசுகையில் வெளிப்படையாக தெரிவித்துள்ளார். அதுமட்டுமின்றி கசோகி படுகொலையில் சதி உள்ளதாகவும் அவர் கூறி உள்ளார்.

இது தொடர்பான ஒரு கேள்விக்கு டிரம்ப் பதில் அளிக்கையில், கசோகி படுகொலையில் நடந்தது என்ன என்பது நமக்கு விரைவில் தெரிய வரும். நாம் நம்மிடம் அபார திறமை படைத்தவர்களை கொண்டுள்ளோம். அவர்கள் விசாரணை நடத்திக்கொண்டு வருவார்கள் என்று கூறினார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, கசோகி கொலையில் தனக்கோ, மன்னருக்கோ தொடர்பு இல்லை என்று சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான் என்னிடம் தெரிவித்தார். அவர்களுக்கு இதில் தொடர்பு இருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டால், அதில் நான் மிகவும் வருத்தம் அடைய நேரிடும். பொறுத்திருந்து பார்ப்போம் என்று குறிப்பிட்டார்.

# எமது இனத்தின் வரலாறு எனக்கு வழிகாட்டும்

## புதிய கட்சியை ஆரம்பிக்கும் பிரகடனத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் நம்பிக்கை

வட மாகாண முதலமைச்சராக எனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்த நான் எனது முதலமைச்சர் பதவிக்காலம் பூர்த்தியாகிவரும் நிலையில் எனது எதிர்காலச் செயற்பாடுகள் எப்படி இருக்கப் போகின்றன என்பது தொடர்பாக தெளிவுபடுத்தும் நோக்கத்தில் தமிழ் மக்கள் பேரவையினூடாக உங்கள் அனைவரையும் இன்று சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கடும் சவால்கள் நிறைந்திருந்த கடந்த 5 வருட காலத்தில் என்னுடன் பணியாற்றிய சக மாகாண சபை உறுப்பினர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், எனக்கு ஆதரவு நல்கிய நண்பர்கள், தோளோடு தோள் நின்று சேவையாற்றிய தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவ மாணவியர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் பெரும் ஆதரவும் அரவணைப்பும் அளித்த தாயக மற்றும் புலம்பெயர் மக்கள் ஆகிய சகலருக்கும் எனது நன்றிகளை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆழமானநீச்சல் தடாகத்தினுள் பாய்ந்து முழுக இருக்கும் நீச்சல் வீரனின் மனோநிலையில் நான் தற்போது இருக்கின்றேன். ஐந்து வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறான ஒரு நிலை இருந்தது. குதித்து எழும்பி மீண்டும் ஆழ நீரை நோட்டம் விட்டுக் கொண்டிருப்பது போல் உங்கள் முன் நிற்கின்றேன்.

### நூறு வருடகாலம் தொடரும் சிங்கள - தமிழ் முரண்பாடு

இலங்கையின் சுதந்திரத்துக்காக சிங்களச் சகோதர்களுடன் தோளோடு தோள்நின்று போராடியவர்கள் தமிழர்கள். ஆனால், 1920 ஆம் ஆண்டளவில் நாட்டை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய நடவடிக்கைகளில் சிங்கள அரசியல் தலைவர்கள் ஈடுபட்டமை கவலைக்குரியது. சிங்களத் தலைவர்கள் நாடு முழுவதிலும் சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்துவதற்கு ஏற்றவாறு 'ஒரு நபருக்கு ஒரு வாக்கு' (One man one vote) என்ற வழிமுறையை பிராந்தியப் பிரதி நிதித்துவம் (Territorial Representation) வேண்டும் என்ற முறையில் ஆங்கிலேயரிடம் கோரினர். அது எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற விதத்தில் அதை எதிர்த்த கௌரவ சபாபதி அவர்களின் தலைமையிலான வடமாகாண தமிழ்த் தலைவர்கள், தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்களில் அவர்களது வரலாற்று ரீதியான சுய நிர்ணய ஆட்சிமுறை, அடையாளம் மற்றும் இருப்பு என்பவற்றை பாதுகாக்கும் நோக்கத்தில் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தினர். (Communal Representation). மகாவம்ச மனநிலையில் இருந்துகொண்டு தமது அடையாளத்தை நாடு முழுவதிலும் ஏற்படுத்தி சிங்கள இனத்தை வியாபிக்கச் செய்யும் சிங்கள அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளுக்கும் பூர்வீகக் குடிகள் என்ற அடிப்படையில் 'தமிழர்' என்ற அடையாளத்தை பாதுகாக்கும் பொருட்டான தமிழ் அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளுக்கும் இடையில் அன்று முதல் உருவான 'சிங்கள–தமிழ்' இன முரண்பாட்டு நிலை அடுத்துவரும் 2019ம் ஆண்டில் 100 வருடங்களை எட்டப்போகின்றது . இந்த இன முரண்பாடானது அது தோன்றுவதற்கு காரணமான நோக்கங்கள் மற்றும் காரணிகளில் எந்தவித மாற்றமும் இன்றி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

### தொடர்ந்து ஏமாற்றிய பௌத்த பேரினவாதம்

தமிழ் மக்களின் இந்த 'சுய பாதுகாப்பு' போராட்டமானது ஓர் அஞ்சல் ஓட்டமாக பின்னர் தந்தை செல்வா வழியாக முன்னெடுக்கப்பட்டது. இதன் போது ஏற்படுத்தப்பட்ட பல உடன்படிக்கைகள் பௌத்த பேரினவாத சக்திகள் காரணமாக கிழித்தெறியப்பட்டு தொடர்ந்து ஏமாற்றப்பட்டோம். பின்னர் 1970 களின் ஆரம்பத்தில் ஆயுத வழிமுறைகளினூடாக நகர்த்தப்பட்ட இந்தப் போராட்டம் 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஓர் அரசியல் ராஜதந்திர போராட்டமாக பரிணாமம் பெற்று இன்று எமது கைகளை வந்தடைந்திருக்கின்றது. ஆரம்பித்த நோக்கம் வெற்றி பெறும் வரையில் இந்த அஞ்சல் ஓட்டம் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். இதனை வெற்றியுடன் முடிவுக்கு கொண்டுவர வேண்டிய ஒரு கடமை எமக்குண்டு. இல்லையேல் சாணக்கியமும் பொறுப்பும் ஆற்றலும் உள்ள அடுத்த தலைமுறையினரிடம் அதனை கையளிக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

### விட்டுக் கொடுப்புக்கு இடமேயில்லை

இது ஒரு சுய பாதுகாப்பு போராட்டம். இதன் அடிப்படை விடயங்களில் விட்டுக்கொடுப்பு செய்வதற்கு இந்த போராட்டத்தில் பங்குகொண்டிருக்கும் எவருக்கும் உரிமை இல்லை. அதேசமயம் இந்த 99 வருட கால சுய பாதுகாப்பு போராட்டத்தில் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட எண்ணற்ற வன்முறைகள், அரசியல் பாகுபாடுகள் மற்றும் இறுதியாக 2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'இன அழிப்பு யுத்தம்' ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டு 2 இலட்சத்துக்கும் அதிகமான எமது மக்களை நாம் இழந்துள்ளோம். பல ஆயிரம் உயிர்களைத் தியாகம் செய்துள்ளோம். பலர் ஊனமாகியுள்ளர். சுமார் 15 இலட்சம் மக்கள் சொந்த இடங்களைவிட்டு வெளிநாடுகளுக்கு வெளியேறியுள்ளனர. அதைவிட பெருமளவிலான எமது பூர்வீக நிலங்களை இழந்து, கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்து, நெருக்கடியான ஒரு நிலைமையில் இன்று நாம் நிற்கின்றோம். ஆனாலும் நாங்கள் சோர்வடையவில்லை. நம்பிக்கையைத் தளர விடாமல் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றோம். ஒன்றைமட்டும் நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். அதாவது, நாம் எமது தனித்துவத்தை வலியுறுத்திப் போராடாமல் இருந்திருந்தால் எப்போதோ எமது இனம் இலங்கையில் படிப்படியாக அழிவடைந்து போயிருக்கும். இவ்வாறு இலங்கை பூராகவும் அழிந்துபோன தமிழ்க் குடும்பங்கள் பற்றி வரலாற்றாசிரியர்கள் பலர் குறிப்பிட்டுள்ளார்கள்.

### மகாவம்ச மன நிலையில் சிங்கள, பௌத்த தலைமை

தமிழ் மக்களுடன் உரிய அதிகாரங்களை பகிர்ந்துகொள்வதன் மூலம் தாங்கள் இழப்பதற்கு எதுவும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ளாமல் தொடர்ந்தும் தீர்க்க தரிசனம் அற்ற வகையில் சிங்கள பௌத்தத்தை முதன்மைப்படுத்தும் அதே மகாவம்ச மனநிலையுடன்தான் இன்றைய சிங்களத் தலைவர்களும் செயற்படுகின்றார்கள். தொடரும் இந்த இன முரண்பாடு சிங்கள மக்களையும் பாதித்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் இன்று அதல பாதாளத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அன்று பொருளாதாரத்தில் எம்மைவிட பின் தங்கி இருந்த சிங்கப்பூர் இன்று நாம் நினைத்தாலும் எட்டமுடியாத உயரத்தில் இருக்கிறது. எல்லா இன மக்களும் அங்கு சமமாக மதிக்கப்படுவதுடன் சம வாய்ப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மிகச்சிறிய எண்ணிக்கையில் அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் சுதந்திரத்துக்காக தோளோடு தோள் நின்று போராடியமைக்கு அங்கீகாரமாகத் தமிழை ஆட்சிமொழி ஆக்கி சிறப்பித்துள்ளார்கள். இதுதான் இன ஐக்கியம். இங்கிருந்துதான் நல்லிணக்கம் ஏற்படும்.

ஓர் இனத்துக்கும் ஒரு மதத்துக்கும் முதன்மை என்ற நிலை இருக்கும் வரை பாரிய முரண்பாடுகள் இந்நாட்டில் இருந்து கொண்டேயிருக்கும். கற்பனைக் கதைகளுடன் எழுதப்பட்ட மகாவம்சத்தை தொடர்ந்தும் வரலாறாக சிங்கள சிறார்களுக்கு பாடசாலைகளின் ஊடாக போதிக்கும் வரையிலும், தமிழ் மக்கள் பூர்வீக குடிகள் என்பதை மறுத்து அவர்கள் வந்தேறுகுடிகள் என்று பொய்யான வரலாற்றைப் போதிக்கும் வரையிலும் இனப்பிரச்சினை இலங்கையில் இருந்து கொண்டேயிருக்கும். இதுவரை காலமும் வட கிழக்கு மாகாண தமிழ் மக்களின் தொன்மை பற்றி எம்மவர் உரையாதிருந்ததால் சிங்கள மக்கள் அதை அறியாதவர்களாகவே இருந்து வந்துள்ளார்கள். இப்பொழுது தான் அவர்கள் அதிர்ச்சி அடையத் தொடங்கியுள்ளார்கள். சிங்களமொழி கி.பி. 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளிலேயே ஜனித்தது என்று நாம் கூறும்போது அதற்கு முன் வாழ்ந்த துட்டகைமுனு என்ற சிங்கள மன்னன் சம்பந்தமான கதைகள் எல்லாம் கேள்விக்குரியனவாக ஆக்கப்படுகின்றன.

### சுய பாதுகாப்புப் போராட்டம் வன்முறை மூலம் அடக்கப்பட்டது

பாகுபாடுகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான எமது சுய பாதுகாப்பு போராட்டம் வன்முறை வழிகளில் அடக்கப்பட்டமையும் தொடர்ந்து அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு நாம் ஏமாற்றப்பட்டமையுமே இளைஞர்கள் மத்தியில் விரக்தி நிலையை ஏற்படுத்தி அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடக் காரணங்கள் ஆகின என்பது வரலாறு. பல சிங்களத் தலைவர்களே இதனை வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்கள். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் ஜுலை 2009 இல் ஒரு கருத்தைக் கூறியிருந்தார் தற்போதைய கௌரவ நிதி அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் *'தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்த ரீதியாக தோற்கடித்ததன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு விட்டதாக எவரேனும் கருதினால் அது முட்டாள்தனமான கருத்தாகவே நோக்கப்பட வேண்டும். 30 வருட காலமாக நீடித்த தேசிய இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வுத் திட்டமே தற்போது விஞ்சி நிற்கும் தேவை. விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் கடுமையான நோயின் நோய்க்குறிகள் மட்டுமே. இன்னமும் நோய்க்கான மருந்து வழங்கப்படவில்லை'* என்று கூறியிருந்தார்.

### மஹிந்தவுக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு

2009 இல் ஆயுத போராட்டம் முடிவுக்கு வந்த போது, தமிழ்த் தலைவர்கள் தனி நாட்டு கோரிக்கையை கைவிட்டபோது, அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கான பொன்னான சந்தர்ப்பம் கிடைத்திருந்தும் அதனை அவர் பயன்படுத்த விரும்பவில்லை. அவருக்குப்பின்னர் வரலாற்றில் என்றும் இல்லாதவகையில் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றுசேர்ந்து 'நல்லாட்சி' அரசாங்கத்தை அமைத்த போதும் இனப்பிரச்சினையை தீர்க்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் அப்போதைய சிங்களத் தலைவர்களுக்கு ஏற்பட்டது. அவர்களும் அதை செய்யவிரும்பவில்லை. மாறாக, முன்னைய ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு யுத்தம் காரணமாக சர்வதேச ரீதியில் ஏற்பட்டிருந்த போர்க்குற்ற விசாரணை மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கு ஏற்ற வழிவகையாகவே 'நல்லாட்சி' எனும் பெயரை பயன்படுத்தினார்களே தவிர, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பமாக இதயசுத்தியுடன் செயற்படவில்லை. ஆகக்குறைந்தது போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வினைத்திறனான ஒரு பொறிமுறையைக் கூட ஏற்படுத்த அவர்கள் முயலவில்லை.

அதிகாரமற்ற வடமாகாண சபை ஊடாக எமக்கு ஒதுக்கப்பட்ட சிறிய அளவிலான நிதியைப் பயன்படுத்தி எம்மால் முடிந்தளவுக்கு எமது மக்களின் துயர் துடைக்கும் பணியைச் செய்துள்ளோம். இது யானைப் பசிக்கு சோளப் பொரி போட்டது போன்றது. இது எமது மக்களைப் பொறுத்த வரை நாம் எதுவும் செய்யவில்லை என்ற தோற்றப்பாட்டையே ஏற்படுத்தியுள்ளது. எமது செயற்பாடுகள் மற்றும் திட்டங்களுக்குப் பல்வேறு முட்டுக்கட்டைகளும் சிக்கல்களும் கடந்த 5 வருட காலங்களில் ஏற்படுத்தப்பட்டன. வட மாகாண சபையில் நேற்று ஆற்றிய இறுதி உரையில் இது தொடர்பில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன்.

### மாகாண சபை முறைமை தீர்வுக்கான அடிப்படையேயல்ல

தமிழ் மக்களின் ஆயுத போராட்டம் இடைக்காலத்தில் இருந்தபோது 1987ஆம் ஆண்டு எம் மீது திணிக்கப்பட்ட ஒரு தீர்வு முறைமையே இந்த மாகாண சபைக் கட்டமைப்பு. பலவீனமான, அதிகாரம் அற்ற இந்த கட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான ஒரு ஆரம்ப புள்ளியாகக் கூட இருக்க முடியாது என்று எங்கள் தமிழ்த் தலைவர்கள் அன்றே நிராகரித்துவிட்டார்கள். அதன் பின்னர் இனப்பிரச்சினை மேலும் சிக்கலடைந்து ஓர் இன அழிப்பு யுத்தத்தில் முடிவடைந்தது.

எந்த வகையிலும் எமது மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத ஒரு கட்டமைப்பே மாகாண சபைக் கட்டமைப்பு என்ற யதார்த்தம் தெரிந்திருந்தபோதிலும் பிழையானவர்களின் கைகளில் அதிகாரம் சென்று எமது மக்களுக்கு மேலும் ஆபத்தாக முடியக்கூடாது என்ற காரணத்தினாலேயே தேர்தலில் போட்டியிட்டு வட மாகாண சபையைக் கைப்பற்றினோம். கைப்பற்றிவந்த பின் நாம் எதுவும் செய்யவில்லை என்று கொக்கரிப்போர் யார் என்று பார்த்தால் 'பிழையானவர்கள் கைகளுக்கு செல்லக்கூடாது' என்று யாரை அன்று அடையாளப்படுத்தினோமோ அவர்களே அவர்கள் அரசாங்கத்திற்கு மண்டியிட்டு அல்லது பிச்சை கேட்டு ஏன் உங்கள் காரியங்களை நீங்கள் இயற்றவில்லை என்றே கேட்கின்றார்கள். பணிந்து போய், பகடைக் காயாகி, பல நூறு வேலைத்திட்டங்களை ஏன் இயற்றவில்லை என்றே அவர்கள் கேட்கின்றார்கள். அவர்களுக்கு பதில் சொல்வதானால், எமக்கு எமது உரிமைகள் முக்கியம். சலுகைகள் அன்று என்ற படியால்தான் எமக்கு எமது வருங்கால நிரந்தரத் தீர்வு அவசியம். இன்றைய ஒரு அடிமைப்பட்ட சொகுசு வாழ்க்கையல்ல.

### இடைக்கால நிர்வாகத்தை ஏன் ஏற்படுத்தவில்லை?

தீர்வு முயற்சியில் உண்மையான அக்கறை கொண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் உண்மையான கரிசனை கொண்டிருந்தால் அதிகாரங்கள் கொண்ட 'இடைக்கால நிர்வாகத்தை' அரசாங்கம் யுத்தம் முடிந்தகையோடு ஏற்படுத்தியிருந்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

வட மாகாண சபைக்கு மத்திய அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்காத நிலையில் புலம்பெயர் உறவுகளின் நிதி பங்களிப்பை பெற்று எமது வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக முதலமைச்சர் நிதியத்தை அமைப்பதற்கு முயற் சித்த போதிலும் அரசாங்கம் அதற்கு அனுமதிக்க வில்லை. ஏன் வேறு நிதியங்களைப் பாவிக்க வில்லை என்று கேட்கின்றார்கள் சிலர். எமது உரித்தைக் கைவிட்டு விட்டுக் கரவாக ஏன் பணத்தை வெளிநாடுகளில் இருந்து வருவிக்க வில்லை என்பதே அவர்கள் கேள்வி. கரவான எமது செயல் கள் மத்திய அரசாங்கங்களினால் எவ்வாறு எமக் கெதிராகத் திசை திருப்பப் படும் என்பது எமக்குத் தெரியும். தமிழர் புனர்வாழ்வு அமைப்புஎன்றTRO அமைப்பின் நிதிகள் இன்னமும் முடக்கி விடப்பட்டே இருக்கின்றன. முதலமைச்சர் நிதியத்தை வழங்குங்கள் என்று அரசாங்கத்துக்கு கூற வக்கில்லாதவர்களே கரவு முயற்சிகளில் எம்மைஈடுபடச்சொல்கின்றார்கள். நாங்கள் வேறு நிதியங்களைப் பாவித்து பணத்தை வருவிக்கின்றோம் என்று கண்டால் அவற்றை மூடி விட உடனே நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம். அண்மையில் பிரித்தானியாவுக்கு சென்ற வட மாகாண ஆளுநர் உதவிகளை செய்யுமாறும் முதலீடுகளை செய்யுமாறும் புலம் பெயர் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்தமை வேடிக்கை யாக இருக்கிறது. அதே ஆளுநர் தான் எமது நிதியத்தை எமக்குக் கிடைக்கவிடாமல் நாடகமாடி வந்தவர்.



ஆவாகுழுபோன்ற வன்முறை குழுக்களை 3 மாதங்களுக்குள் தன்னால் இல்லாமல் ஒழிக்க முடியும் என்று ஆளுநர் அங்கு தெரிவித்திருப் பது பல சந்தேகங்களை எமக்கு ஏற்படுத்துகிறது. ஆளுநரால் 3 மாதங்களுக்குள் ஆவாக் குழுவை இல்லாமல் செய்ய முடியும் என்றால் ஏன் அதனை அரசாங்கம் ஆளுநர் ஊடாகக் கடந்த 5 வருடங் களில் செய்யவில்லை? அல்லது ஆளுநருக்கும் அரசாங்கத்துக்கும் ஆவா குழுவுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா? என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

### சிங்களக் குடியேற்றங்களும் பௌத்த மத மயப்படுத்தலும்

ஒரு புறம் வட மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்து வந்த அதேவேளை, மறுபுறம் சிங்கள குடியேற்ற திட்டங்களையும் பௌத்த மயமாக்கலையும் தமிழ் மக்களின் கடும் எதிர்ப்புக்கள் மத்தியிலும் நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்து வந்துள்ளது. இதற்கு ஆளுநர் உடந்தையாக இருந்துள்ளார்.

இராணுவத்தை வடக்கில் இருந்து அகற்ற மறுத்து வருவதுடன், போதைப்பொருள் கடத்தல் மற்றும் வன்முறை கும்பல்களின் செயற்பாடு களைக் கட்டுப்படுத்துவதிலும் அசட்டையீனமாக இருந்துவருகிறனர் அரசாங்கமும் ஆளுநரும். அரசாங்கத்தின் செயற்பாடுகள் இப்படி இருக்கும் போது, தமிழ்தேசியக்கூட்டமைப்போ இந்த அரசாங்கத்தை நல்லாட்சி அரசு என்று சர்வதேச சமூகத்துக்கு நற்சான்றிதழ் கொடுத்து வருவதுடன், தமிழ்மக்களுக்கு ஒரு தீர்வை வழங்கும் என்றும் ஏமாற்றிவருகிறது. முதலில் 2016 என்றார்கள். பின்னர் 2017 என்றார்கள். இப்பொழுது 2018 என்கின்றார்கள். விந்தையிலும் விந்தை இந்தச் செயல்.

நிலைமைகள் இவ்வாறு நெருக்கடி மிகுந்த தாகவும் சிக்கலாகவும் இருக்கும் ஒரு சூழ்நிலை யில்தான் முதலாவது வட மாகாண சபையின் 5 வருட காலம் முடிவுக்கு வந்துள்ளது.

### நான்கு தெரிவுகள்

எனது முதலமைச்சர் பதவிக் காலத்தின் பின்னர் எனது செயற்பாடுகள் எப்படி இருக்கமுடியும் என்பது தொடர்பில் 4 தெரிவுகள் இருப்பதாகக் கூறிவந்தேன்: 1.அமைதியாக வீட்டுக்குச் செல்லுதல் 2. ஒரு கட்சியுடன் இணைந்து தேர்தலில் நிற்பது 3. ஒரு புதிய கட்சியை ஆரம்பித்து செயற் படுவது. 4. ஒரு மக்கள் இயக்கத்திற்கு தலைமை தாங்குவது – என்பவையே அவை.

முதலாவது வழியை நான் தெரிவு செய்தால் எனது குடும்பத்தினர் நன்மையடைவதுடன் நானும் எனது ஓய்வுகாலத்தை அமைதியாகக் கொண்டுசெல்லமுடியும். எனது உடல் நிலை சீரடையும். அப்படியான ஒரு முடிவை நான் எடுப்பதானால், நான் அரசியலுக்கே வந்திருக்கக் கூடாது. அதுவே அறமாக இருந்திருக்கும். அரசியலுக்கு வந்த பின்னர் இத்தகைய ஒரு முடிவை எடுப்பது நான் தொடர்ந்து ஆற்றவேண்டிய பல பணிகளை ஆற்றாமல், பூர்த்திசெய்யவேண்டிய பல பணி களை பூர்த்திசெய்யாமல், என்னை நம்பிய மக் களை நட்டாற்றில் விட்டுவிட்டு எனது நலன்களை முதன்மைப் படுத்தி செல்வதாகவே அமையும். இது மனச் சாட்சிக்கு விரோதமானது என்று உணர்கின்றேன்.

மேலும் என்னை ஓர் இடர் நிலையில் இருந்து காப்பாற்றிய எம் மக்களுக்கு 'நான் உங்களுடன் இருப்பேன்' என்று அன்று கூறிய வாக்குப் பொய்த்துவிடும். அதனால் இத்தகைய ஒரு தெரிவை என்னால் எடுக்க முடிய வில்லை.

### பொது வேட்பாளராகவே நான் களமிறங்கினேன்

நான் எந்த ஒரு கட்சியையும் சார்ந்தவன் அல்ல. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொது வேட்பாளராகவே கடந்த தேர்தலில் போட்டியிட்டேன். ஆனால் என்னை ஒரு பொம்மையாக வைத்து அரசியலை நடத்துவதற்கு அதன் தலைவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அதற்கு என்னால் இடமளிக்கமுடியவில்லை. எனக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமைக்கும் இடையே கடந்த 4 வருடங்களில் இடைவெளி பெரிதும் அதிகரித்துள்ளது. இது நான் பெரிது, நீ பெரிது என்ற மனப்பான்மை காரணமானதாகவோ அல்லது தலைமைத்துவப்போட்டி காரணமாகவோ ஏற்படவில்லை. மாறாக, எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் கோட்பாடு ரீதியாகவும் அணுகுமுறை ரீதியாகவும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே இந்த வேறுபாடுகள் ஏற்பட்டன. ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் மீண்டும் போட்டியிடுவதை என்னால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. நான் கைப்பொம்மையாக இருக்க சம்மதிக்காதவரை எனக்கு மீண்டும் இடமளிக்க அவர்களும் தயார் இல்லை. பல நண்பர்கள் ஒற்றுமை அவசியம் என்பதால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்தே போட்டியிட வேண்டும் என்றார்கள். கொள்கையில் திடமாக இல்லாது முன்பு 'துரோகிகள்' என்று வர்ணித்தவர்களின் வழித்தடத்திலேயே இப்பொழுது பயணம் செய்யும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் எனக்கென்ன வேலை என்று கேட்டு அவர்கள் வாய்களை அடைத்துவிட்டேன். அதனால், தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது சாத்தியமற்ற ஒன்று.

தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து பணியாற்றும் ஏதாவது ஓர் அரசியல் கட்சியில் இணைந்து போட்டியிடுவது எமக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைப்பதாக அமைந்துவிடும். 'ஏன் இந்தக் கட்சி?' 'மற்றக் கட்சி கூடாதா?' என்றெல்லாம் போட்டியும் பொறாமையும் மேலோங்கும். ஆகவே இரண்டாவது தெரிவும் சாத்தியம் அற்றது.

எனது தனிப்பட்ட நலனில் அக்கறைகொண்ட நண்பர்கள் பலரும் நான் முதலாவது தெரிவை அல்லது நான்காவது தெரிவையே எடுக்க வேண்டும் என்றே ஆலோசனை கூறி வந்துள்ளார்கள். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற தமிழ் மக்களை ஒன்றிணைத்து ஒரு மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்கும் நான்காவது தெரிவு சிறந்த ஒரு தெரிவாக இருந்தாலும் அதில் சில பலவீனங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்துள்ளேன். குறிப்பாக, மக்கள் இயக்கப் போராட்டங்கள் சாத்வீக கோட்பாடுகளின் அடிப்படையிலானவை. சாத்வீக வழிமுறைகளில் ஆரம்பித்து வன்முறைகளால் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் போராட்டமே இன்று அரசியல் ராஜதந்திர போராட்டமாக பரிணாமம் பெற்றுள்ளது.

### மக்களின் சட்ட ரீதியான பிரதிநிதிகளாவது அவசியமானது

ஜனநாயக தேர்தல்களில் பங்குபற்றி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அரசியல் , ராஜதந்திர மற்றும் சர்வதேச உறவு செயற்பாடுகளில் ஈடுபட்டு எமது மக்களின் சட்ட ரீதியான பிரதிநிதிகளாக அவர்களின் கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் பெறுவதும் ஆதரவைப் பெறுவதுமே இந்த அரசியல் ராஜதந்திர போராட்டத்தின் அடிப்படை. இதனை உணர்ந்துதான் 1990 களின் ஆரம்பத்தில் வெறும் ஒன்பது வாக்குகளுடன் ஒரு தமிழ் அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் வகையில் தேர்தலை நடத்திவிட்டு, அவர்களைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எடுத்துக்காட்டி தமிழ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக சித்திரித்து மழுங்கடிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் வெற்றிகரமாக மேற்கொண்டது. அதே 'ஒன்பது வாக்கு' கட்சியின் ஒரு முக்கிய உறுப்பினர் தான் நாம் எதுவுமே செய்யவில்லை என்று இன்று கூச்சல் போடுகின்றார்.

ஜனநாயக தேர்தல்கள் மூலமாக மக்களின் அபிலாஷைகளை சர்வதேச சமூகத்துக்கு கொண்டு சென்று அவற்றுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் கசப் புணர்வுகள் பகைமைகளை மறந்து தமிழ் தேசிய கோட்பாட்டின் அடிப்படையில் பழம்பெருந் தமிழ் அரசியல் கட்சிகளையும் முன்னாள் ஆயுத போராட்ட அமைப்புக்களையும் ஒன்றிணைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசிய கோட்பாடுகளை கைவிட்டு தடம் புரண்டு 'ஒன்பது வாக்குக் கட்சி'யுடன் கைகோர்த்து நிற்கின்றது. பொருளாதார அபிவிருத்தி ஏன் செய்யவில்லை என்று துணிந்து கேட்டுக் கொண்டிருக்கின்றது. அரசியல் தீர்வின் அத்தியாவசியத்தை அறியாமல் அரற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

### மக்களின் எதிர்பார்ப்பு

நேற்றைய எனது உரையில் குறிப்பிட்டிருந்தபடி, நான் 2013 ஆம் ஆண்டு வட மாகாண சபைதேர்தலில் போட்டியிடும் போது எமது மக்கள் கொடிய யுத்தம் ஒன்றினூடான இன அழிப்பை சந்தித்து மிகவும் பலவீனமான நிலையில் நொந்துபோய் இருந்தனர். ஆனாலும், தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கொள்கைகளான இணைந்த வடக்கு, கிழக்கில் இறைமையின் அடிப்படையில் எம்மை நாமே ஆளும் சுய நிர்ணய அடிப்படையில் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்ற எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக் கொண்டு எம்மை முழுமையாக நம்பி அதற்கு அங்கீகாரத்தை வழங்கியிருந்தனர். அந்த மனோநிலையும் எதிர்பார்ப்பும் எம் மக்களிடையே இன்னமும் கனன்று கொண்டேயிருக்கின்றது என்பதே எனது அவதானிப்பு.

### பதவிகளும் சலுகைகளும் கண்களை மறைக்கின்றன

அன்றைய தேர்தல் காலத்தில் இந்த வாக்குறுதிகள் சாத்தியமானவைகளாகத் தெரிந்திருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு புதிய ஆட்சிமாற்றத்துடன் புதிய பதவிகள், சலுகைகள் வந்துசேர அவை சாத்தியம் அற்றவைகளாக மாறிவிட்டன. நான் முன்னர் குறிப்பிட்டதுபோல நல்லாட்சி அரசாங்கம் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டுவரும் நிலையிலும், அதற்கு முண்டுகொடுத்து இந்த அரசு எமக்கு தீர்வைத் தரும் என்று கூறிவருகின்றனர். தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாகக் கூட சிங்கள குடியேற்றங்களையும் பௌத்தமயமாக்கலையும் தற்காலிகமாகக் கூட நிறுத்திவைக்க விரும்பாத இந்த அரசாங்கம் எப்படி எமக்கு தீர்வினை வழங்கும் என்று சிந்திக்க முடியாதளவுக்கு பதவிகளும் சலுகைகளும் அவர்களின் கண்களை மறைத்து வருகின்றன.

### வராத தீர்வுக்கு ஆதரவு

வராது என்று தெரிந்திருந்தும் வராத ஒரு தீர்வுத்திட்டத்துக்காக 'ஒற்றை ஆட்சி' முறையை ஏற்றுக்கொண்டு 'இலங்கை ஒரு பௌத்த நாடு' என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இவர்கள் இதற்கான மக்கள் ஆணையை எந்தத் தேர்தலில் இருந்து பெற்றுக்கொண்டார்கள் என்பதை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் விளக்க வேண்டும் அல்லது எதிர்வரும் தேர்தல்களில் இவற்றை மக்கள் முன்பு வைத்து ஆணையைப் பெறவேண்டும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு கூற்று, அரசியலில் மறு கூற்று என்றிருப்பது எம் மக்களை ஏமாற்றுவதாகவே முடியும்.

*(10ஆம் பக்கம் பார்க்க)*

# ராஜஸ்தானில் 31 மலைகள் மறைந்து போய்விட்டனவாம்

## இந்திய உச்ச நீதிமன்றம் அதிர்ச்சி



புதுடெல்லி,ஒக்.25

ராஜஸ்தானில் 31 மலைகள்மறைந்துவிட்டன என அரசு அளித்த அறிக்கையைப்பார்த்து இந்திய உச்ச நீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது

ஆரவல்லி மலைத் தொடரில் நடைபெறும் சட்ட விரோத சுரங்க நடவடிக்கைகளை 48 மணி நேரத்துக்குள் நிறுத்த வேண்டும் என்று ராஜஸ்தான் அரசுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆரவல்லி மலைத் தொடரில் சட்டவிரோதமாக சுரங்க பணிகள் நடைபெறுவது குறித்த வழக்கு இந்திய உச்ச நீதிமன்றத்துக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கில் மலைத் தொடரின் தற்போதைய நிலைமை குறித்து ராஜஸ்தான் அரசு அறிக்கை தாக்கல் செய்திருந்தது.அதில் ராஜஸ்தான் மாநில ஆரவல்லி மலைத்தொடரில் 31 மலைப்பகுதிகள் மறைந்து விட்டன என்று கூறப்பட்டிருந்தது

வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஆரவல்லி மலைத் தொடரில் சுரங்க பணிகள் மேற்கொள்வதற்காக ராஜஸ்தான் அரசு, அதன் பங்காக ரூ. 5,000 கோடி பெற்று வருகிறது. எனினும், லட்சக்கணக்கான மக்களின் உயிரை கருத்தில் கொண்டு, 115.34 ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும் சுரங்க நடவடிக்கைகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். 31 மலைகள் மாயமாகிவிட்டன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மலைகள் தடுப்புச் சுவராக பயன்படுகின்றன. ஆனால் உண்மையில், 15-20 சதவீத மலைப் பகுதிகள் முற்றிலும் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. மலையை அழித்து விட்டு என்ன செய்ய போகிறீர்கள்? டெல்லியில்காற்று மாசுபாடு அதிகரித்ததற்கு ஆரவல்லி மலைத்தொடரின் சில பகுதிகள் மறைந்தது கூட காரணமாக இருக்கலாம். ரூ. 5,000 கோடி வருமானம் பெறுவதற்காக, டெல்லியில் உள்ள மக்களின் உயிரை பணயம் வைக்கக் கூடாது. ராஜஸ்தான் அரசு இந்த விவகாரத்தை சாதாரணமாக கையாண்டுள்ளது. அதனால்தான் நீதிமன்றம் தலையிட்டு உத்தரவு பிறப்பிக்க வேண்டியுள்ளது - என்றனர்.

மேலும், இந்த உத்தரவுக்கு பதில் மனு தாக்கல் செய்யுமாறு ராஜஸ்தான் மாநில தலைமைச் செயலருக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை ஒக்டோபர் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர்.

ஆரவல்லி மலைத்தொடரில் உள்ள சுரங்கங்களில் செம்பு, ஜிப்சம், மார்பிள், லைம்ஸ்டோன், சில்லிகா மணல், துத்தநாகம், ராக் பாஸ்பேட், சோப்போன் ஆகிய வளம் மிக்க கனிமங்கள் கிடைப்பதால், சட்ட விரோத சுரங்கங்கள் அதிக அளவில் செயல்படுகின்றன என சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

# பட்டாஸுக் களஞ்சிய அறை வெடித்ததில் நால்வர் சாவு!

## காஞ்சிபுரத்தில் சம்பவம்



காஞ்சிபுரத்தில் அனுமதியில்லாமல் வீட்டின் ஓர் அறையைப் பட்டாஸ் சேமிப்புக் களஞ்சியமாக மாற்றி வைத்திருந்தனர்.அதில் வைக்கப்பட்டிருந்த பட்டாஸுகள் திடீரென வெடித்துச் சிதறியதில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

காஞ்சிபுரம், நாகலுத்து தெரு பகுதியைச் சேர்ந்தவர் மதீன். இவர் வீட்டின் அறை ஒன்றில் தீபாவளிக்கு விற்பனை செய்வதற்காக நாட்டு வெடிகள் மற்றும் பட்டாஸுகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தார். வீட்டு அறையில் வைத்திருந்த பட்டாஸுகளை கடைகளுக்கும் மற்றும் கேட்போருக்கும் விற்பனை செய்ய திட்டமிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை இந்தப் பட்டாஸுகள் இருந்த அறையில் எதிர்பாராத விதமாகத் தீப் பிடித்தது. இதில் அறையில் இருந்த பட்டாஸுகள் முழுவதும் வெடித்துச் சிதறின. வீட்டுக்குள் இருந்த சிலிண் டரும் வெடித்தது. இதில் இவரது வீடும், அருகில் இருந்த மற்றொரு வீடும் இடிந்து விழுந்தன. இதனால் இந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாக மாறியது. அக்கம் பக்கத்தில் இருந்த பொதுமக்கள் நாலாப்புறமும் அலறி அடித்துக் கொண்டு சிதறி ஓடினர்.

இதில் தீ மற்றும் இடிபாடுகளுக்குள் சிக்கிய மதீனின் மனைவி சாகிராபாணு (45), இவரது மகன் முஸ்தாக் (26) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த னர். இந்த வெடிவிபத்தில் பக்கத்து வீடும் இடிந்ததில் இடிபாடுகளுக் குள் சிக்கிய மஸ்தான் (35) என்பவரும் உயிரிழந்தார். இந்த இடிபாடு களில் சிக்கிய மூதாட்டி சர்புதீன் பானு (65) மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்தார். இந்த வெடி விபத்தின்போது அருகில் இருந்த 2 இரு சக்கர வாகனங்கள் தீப்பிடித்து எரிந்தன.

# நடுவானில் பெண்ணுக்குப் பிரசவம் விமானம் மும்பையில் தரை இறக்கம்



மும்பை,ஒக்.25

அபுதாபி விமானம் ஒன்று அரபிக்கடலின்மேலே பறக்கும்போது, இந்தோனேசியப் பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டு, பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

இதனால்அபுதாபியில் இருந்து ஜகார்த்தாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த விமானம் மும்பைக்குத் திருப்பி விடப்பட்டு, தரையிறக்கப்பட்டது.

இதுகுறித்து மும்பை விமான நிலைய அதிகாரி கூறும்போது -

"எதிஹாட் ஏர்வாய்ஸ் விமானம் நேற்று புதன்கிழமை அன்று அபுதாபியில் இருந்து ஜகார்த்தாவுக்குச் சென்று கொண்டிருந்தது.

அரபிக் கடலின்மீது பயணித்த போது, விமானப்பயணி ஒருவருக்குப் பிரசவ வலி எடுத்தது. அதைத் தொடர்ந்து நடுவானிலேயே அவருக்குப் பெண் குழந்தை பிறந்தது. இதனால் விமானத்தை உடனடியாகத் தரையிறக்க வேண்டும் என்று விமானி மும்பை விமான நிலையக் கட்டுப்பாட்டு அறையைத் தொடர்பு கொண்டார்.

இதைத் தொடர்ந்து விமானம் மும்பையில் தரையிறங்கியது. விமான நிலைய மருத்துவர்கள் தாய், சேயின் உடல்நிலையைப் பரிசோதித்தனர். தற்போது இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்'' - என்று தெரிவித்தார்.

இதையடுத்து எதிஹாட் விமானம் இரண்டு மணி நேர தாமதத்துக்குப் பிறகு ஜகார்த்தா கிளம்பியது.

# ஜெ மரணம் தொடர்பான விசாரணை: ஆணயத்திற்கு மேலும் கால அவகாசம்

ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஆறுமுகசாமி ஆணையத்தின் கால அவகாசம் மேலும் 4 மாதத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. 2017ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் திகதி நீதிபதி ஆறுமுகசாமி விசாரணையைத் தொடங்கினார். முதல்கட்டமாக விசாரணை ஆணையத்தின் காலம் 3 மாதங்களாக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த விசாரணை ஆணையத்தில் சசிகலாவின் உறவினர்கள், முன்னாள் தலைமைச் செயலாளர்கள், காவல் துறை அதிகாரிகள், அரசு மருத்துவர்கள், ஜெயலலிதாவின் உதவியாளர்கள், அவரது வீட்டில் பணிபுரிந்தவர்கள் என இதுவரை 30 க்கும் மேற்பட்டோர் ஆஜராகி விளக்கம் அளித்துள்ளனர். சாட்சியம் அளித்தவர்களிடம் சசிகலா தரப்பு வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை நடத்தி வருகின்றனர்.

குறிப்பிட்ட காலத்துக்குள் விசாரணை முடிவடையாத காரணத்தால் கடந்த டிசம்பர் 24 ஆம் தேதியில் இருந்து 6 மாத காலத்துக்கு அதாவது 2018 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் வரை கால அவகாசத்தை நீட்டித்து தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்பின்னர் மேலும் 4 மாதம் கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.இப்போது மேலும் நான்கு மாத கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

# சியோல் அமைதி விருது பிரதமர் மோடிக்கு



சியோல், ஒக்.25

சர்வதேச பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளுக்குதென்கொரியாநாட்டின் மிக உயரிய சியோல் அமைதி விருதுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தென் கொரியா நாடு கடந்த 1990ஆம்ஆண்டில்24ஆவது ஒலிம்பிக் போட்டிகளை தலைநகர் சியோலில் வெகு சிறப்பாக நடத்தியது.

இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் பல்வேறு துறைகளில் சிறப்பான சேவையாற்றிய உலக தலைவர்களுக்கு ஆண்டுதோறும் சியோல் அமைதி விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அவ்வகையில், 2018 ஆம் ஆண்டுக்கான விருதுக்கு உலகில் உள்ள பல்வேறு நாடுகளை சேர்ந்த சுமார் 1300 நபர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. அவற்றில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இப்பரிசுக்கு தேர்வாகியுள்ளார்.

இந்தியாவில் பண மதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் ஊழல் தடுப்பு நடவடிக்கைகளால் தூய்மையான அரசை உருவாக்கியதற்காகவும் உலக நாடுகளுடன் நட்புறவை பாராட்டி, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், உலக நாடுகளின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்ததற்காகவும் அவருக்கு இந்த விருது அளிக்கப்படுவதாக சியோல் அமைதி பரிசு குழு தெரிவித்துள்ளது.

மேலும், சமூகப் பொருளாதார அமைப்பில் மாற்றத்தை உண்டாக்கி பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கு இடையிலான இடைவெளியை குறைப்பதற்கு உதவியாக மோடி அரசின் கொள்கைகள் அமைந்துள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது



# விராட் கோஹ்லி புதிய சாதனை!

## குறைந்த இன்னிங்ஸில் 10,000 ஒருநாள் ஓட்டங்கள்




இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி, சர்வதேச ஒருநாள் போட்டிகளில் குறைந்த இன்னிங்ஸில் 10 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

குவஹாத்தியில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ஒருநாள் ஆட்டத்தில் 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது இந்திய அணி. இந்த நிலையில், விசாகப்பட்டணத்தில் 2 ஆவது ஒருநாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

போட்டியின் 36.3 ஓவரின்போது 81 ஓட்டங்கள் எடுத்து 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் கோஹ்லி. சச்சின் டெண்டுல்கரை விடவும் 54 இன்னிங்ஸ் குறைவாக விளையாடி இந்த இலக்கை அவர் எட்டியுள்ளார்.

இதன்பிறகு தனது அடுத்த இயல்பான சாதனையை நிகழ்த்தினார் விராட் கோஹ்லி. 106 பந்துகளில் சதத்தை எட்டினார். இது அவருடைய 37ஆவது ஒருநாள் சதமாகும். இதன் மூலம் அவர் மேலும் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். 3 ஆம் நிலை வீரராக கோஹ்லி எடுக்கும் 30ஆவது சதம் இது. 29 சதம் எடுத்திருந்த பொன்டிங்கின் சாதனையைத் தாண்டினார்.

# இலங்கை வீரரை கழற்றிவிடும் மும்பை அணி

அடுத்த ஆண்டுக்கான ஐ.பி.எல் ஏலம் தொடங்கும் முன்பே, வீரர்கள் அணி மாறும் நிகழ்வுகள் தொடங்கியுள்ளன.

2019ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலம், வரும் டிசெம்பர் 16ஆம் திகதி கோவாவில் நடைபெற உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், ஏலத்திற்கு முன்பே ஒவ்வொரு அணியும் வீரர்களை பிடிக்கும் வேலைகள் தொடங்கியுள்ளன.

தென்னாப்பிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் குயிண்டன் டி கொக், கடந்த ஆண்டு ஐ.பி.எல்லில் பெங்களூர் அணிக்காக விளையாடினார். 8 போட்டிகளில் விளையாடிய அவர் 201 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்நிலையில், பெங்களூர் அணி வாங்கிய ரூ.2.8 கோடிக்கு மும்பை அணி அவரை வாங்கியுள்ளது. இதனால் மும்பையில் ஏற்கனவே இருக்கும் இலங்கை சுழற்பந்துவீச்சாளர் அகில தனஞ்சய, பங்களாதேஷ் வீரர் முஸ்தாபிஷுர் ரஹ்மான் ஆகியோர் விடுவிக்கப்பட உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அத்துடன் இஷான் கிஷான், ஆதித்யா தாரே ஆகிய இரண்டு விக்கெட் காப்பாளர்களுடன் டி கொக் மூன்றாவது காப்பாளராக மும்பை அணியில் சேர்ந்துள்ளார். அதேபோல் ஹைதராபாத் அணியில் தொடக்க வீரராக விளையாடும் ஷிகர் தவானை, பஞ்சாப் அணி தங்கள் அணிக்கு இழுக்கிறது.

இதற்காக ஹைதராபாத் அணி கொடுத்துள்ள தொகையை விட, இரண்டு மடங்கு தொகையை சம்பளமாக பஞ்சாப் அணி கொடுக்க முன்வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், தவானுக்கு பதிலாக அந்த அணியின் கருண் நாயரை, ஐதராபாத் அணிக்கு மாற்ற பஞ்சாப் அணி முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. ஏலத்திற்கு முன்பே தொடங்கிய வீரர்களின் மாற்றம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




# 15 போட்டிகளில் 26 ஸ்பொட் பிக்சிங்

அல்ஜஸீராவால் வெளியிடப்பட்ட ஆவணப்படத்தில், 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற ஆறு டெஸ்ட்கள், ஆறு ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், மூன்று உலக 20/20 போட்டிகளில் 26 ஸ்பொட் பிக்சிங்களில் அனீல் முனாவர் என்ற போட்டிகளை நிர்ணயம் செய்பவர் பங்கெடுத்துள்ளார் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், ஏழு போட்டிகளில் இங்கிலாந்து வீரர்களாலும் ஐந்து போட்டிகளில் ஆஸ்திரேலிய வீரர்களாலும் மூன்று போட்டிகளில் பாகிஸ்தானிய வீரர்களாலும் இன்னொரு போட்டியில் ஏனைய நாடொன்றிலிருந்தான வீரர்கள் மூலம் ஸ்பொட் பிக்சிங் நடைமுறைப்படுத்தப்பட்டதாக அந்த ஆவணப்படத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையே லோர்ட்ஸில் 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற டெஸ்ட் போட்டி, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியாவுக்கிடையே கேப் டவுனில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டி, 2011 உலகக் கிண்ணத்தின் ஐந்து போட்டிகள், இலங்கையில் 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற மூன்று உலக 20/20 போட்டிகள் ஆகியனவற்றில் ஸ்பொட் பிக்ஸிங் இடம்பெற்றதாக ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண ஆரம்பத்துக்கு முன்னர் முனாவரால் இங்கிலாந்து வீரரொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி உரையாடலை குறித்த ஆவணப்படம் கொண்டிருந்ததுடன், பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கிடையே 2012ஆம் ஆண்டு டுபாயில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது டி கம்பனி எனப்படுவதின் உதவியாளரொருவரை உமர் அக்மல் சந்தித்த புகைப்படங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், அல்ஜஸீராவின் ஒத்துழைப்பை மீண்டும் சர்வதேச கிரிக்கெட் சபை கோரியுள்ள நிலையில், இந்தக் குற்றச்சாட்டை இங்கிலாந்து கிரிக்கெட்சபை, ஆஸ்திரேலிய கிரிக்கெட்சபை மறுத்துள்ளன.

# தலைவராகிறார் திஸர பெரேரா

இங்கிலாந்து அணிக்கு எதிரான 20/20 போட்டிகளுக்கான இலங்கை அணியின் தலைவராக திஸர பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது இருபதுக்கு 20/20 போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான ஒற்றை சர்வதேச 20/20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியை சகலதுறை வீரரான திஸர பெரேரா வழிநடத்தவுள்ளார்.

இந்தப்போட்டிக்கான இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த குழாமில் இளம் வீரரான கமிந்து மெண்டிஸுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் ஊழலை தடுக்க இந்திய உதவி

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தகவல்



இலங்கை கிரிக்கெட் விளையாட்டில் இடம்பெறுகின்ற ஊழலைத் தடுக்க இந்தியா உதவும் என முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணித் தலைவரும் பெற்றோலியவளங்கள் அபிவிருத்தி அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட இந்திய விஜயத்தின்போது அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் உடன் சென்றிருந்தார்.

இந்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்க இலங்கை கிரிக்கெட்டின் நிலை குறித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்திய சி.பி.ஐ. விசாரணைகளை மேற் கொண்டு பல கிரிக்கெட் சூதாட்டங்களை நிறுத்தியுள்ளதோடு அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதனால் அது தொடர்பான அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள நாம் பாரதப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்தோம். அவர் உடனே மூத்த அமைச்சர் அருண் ஜெட்லியிடம் தொடர்புமேற்கொண்டு கலந்துரையாடுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன் பிரதிபலிப்பாக இந்தியா எமது நாட்டுக்கு கிரிக்கெட் ஊழலைத் தடுப்பது தொடர்பான உதவிகளை வழங்குவதாக தெரிவித்துள்ளார்- என்றார்.

# எமது இனத்தின் ...........

(06ஆம், 07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம் முற்றுமுழுதாக வடகிழக்கு மாகாணங்களை விட்டு வெளியேற வேண்டும் என்று எமது மக்கள் வலியுறுத்தும்போது தனியார் காணிகளிலிருந்து அவர்கள் வெளியேறினால் அதுவே போதும் என்ற அடிப்படையில் செயற்படுகின்றனர் தற்போதைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர். வட கிழக்கில் இருந்து இராணுவம் முழுமையாக வெளியேற்றப்பட வேண்டும் என்று அரசாங்கத்தையோ அல்லது சர்வதேச சமூகத்திடமோகோர அவர்கள் அஞ்சுகின்றனர். மடியில் கனம் இருப்பதால்தான் அவ்வாறு அஞ் கின்றனர் போலும்!

**வீதிக்கு விரட்டப்பட்ட மக்கள்**

இராணுவம் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு எமது மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட சொற்ப மீள்குடியேற்ற நிதியை இராணுவம் வேறிடத்தில் முகாம் அமைப்பதற்குச் செலவாக வழங்கும் வினோதம் இங்குதான் இடம்பெறுகிறது.

எமது மக்கள் வீதிக்கு விரட்டப்பட்டு அவர்களின் காணிகளில் இராணுவம் விவசாயம் செய்வதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் வியாபாரங்களையும் செய்து வருகின்றது. பொருளாதார முக்கியத்துவம் மிக்க இடங்கள் இனம் காணப்பட்டு தென்னிலங்கை மக்கள் வந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மீன்பிடியில் ஈடுபடுவதற்கும் இராணுவம் ஊக்குவிக்கிறது. இராணுவம் முன்னர் இருந்த முன்னரங்க நிலைகள், மினி முகாம்கள் போன்றவற்றில்தாம்வணங்குவதற்கு என்று அமைக்கப்பட்ட புத்தர் சிலைகள், இராணுவம் அந்த இடங்களில் இருந்து வெளியேறிய பின்னரும் அகற்றப்படாமல் விடப்பட்டு பௌத்த விகாரைகளாக மாற்றப் படுகின்றன. இவற்றைப்பற்றி நாடாளுமன்றத்தில் பேசி அரசாங்கத்தை சங்கடப்படுத்தக்கூடாது என்றும் தமது பதவிகளுக்கு ஆபத்து வரக்கூடாது என்றுமே எமது தலைவர்கள் நினைக்கின்றனர்.

**மாவட்ட த்தையே விழுங்கும் ஆக்கிரமிப்பு முயற்சிகள்**

வலிவடக்கில்சிறியதுண்டுகாணிகளை விடு வித்துவிட்டு, முல்லைத்தீவு என்ற ஒரு மாவட்டமே திட்டமிட்ட குடியேற்றங்களால் முற்றிலுமாக விழுங்கப்படுவதை தெரிந்தும் தெரியாததுபோல் உள்ளனர் எமது தற்போதைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர். வடகிழக்கில் தொல்பொருள் திணைக்களம், வன இலாகா, மகாவலி அபிவிருத்தி சபை ஆகியன பூர்வீக தமிழர் வாழ்விடங்களை எல்லாம் ஆக்கிரமிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர் தற்போதைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்.

**காணாமலாக்கப்பட்டோர் நிலை**

காணாமல் போனவர்களின் உறவுகள் வீதிகளில் பல வருடங்களாக போராடி வருகின்றனர். கண்துடைப்பு முயற்சியாக ஏற்படுத்தப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அதிகார மற்ற அலுவலகம் தனது இடைக்கால அறிக்கையை கடந்த செப்ரம்பர் மாதம் ஐ. நா மனிதவுரிமை சபையின் கூட்டத்தொடரை ஒட்டி அவசர அவசர மாக வெளியிட்டுவிட்டு இன்று உறங்கு நிலைக்குச் சென்றுள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை வெளி உலகுக்குக் குறைத்து காட்டுவதே இந்த அறிக்கை வெளியிடப்பட்டதன் ஒரே நோக்கமாகும். முறைப்பாடுசெய்தோர்மட்டுமேகணக்கில் எடுக்கப்பட்டுள்ளனர். பலர் முறைப்பாடே செய்யவில்லை. பலர் முறைப்பாடே செய்யமுடியாத அளவுக்கு குடும்பத்துடன் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பலர் உயிருக்கு பயந்து புலம் பெயர்ந்துள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆணைக் குழுதனது ஆய்வில் இந்த மட்டுப்படுத்தல் கள் (Limitations) குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

**வக்கற்ற தலைவர்கள்**

மன்னார் ச.தொ. ச வளாக மனிதப் புதைகுழியில் இன்றுவரை குழந்தைகள் உட்பட எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை இருநூறை எட்டியுள்ளது. அதேபோல வேறு பல இடங்களிலும் மனிதப்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சரியான முறையில் முகாமைப்படுத்தி சர்வதேசத்தின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதற்கு எமது தலைவர்களுக்கு வக்கில்லை. அவர்களால் அதைச் செய்ய முடியாது. ஏன் என்றால் அவர்கள் சலுகைகளுக்கும் சொகுசுகளுக்கும் அடிமைப்பட்டுவிட்டார்கள்.

குறைந்த பட்சம் இந்த நல்லாட்சி அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவின் ஊடாக ஒரு நல்லெண்ண நடவடிக்கையாகத் தடுப்பிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளையாவது விடுவிக்க முடிந்திருக்கின்றதா? அரசியல் சாணக்கியம் பற்றி அடிக்கடி குறிப்பிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள், 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் வைத்துக்கொண்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஏன் இதுவரை எந்தவிதமான காத்திரமான நடவடிக்கை களையும் எடுக்கவில்லை என்பது எனக்கு புரிய வில்லை. ஆகக் குறைந்தது வரவு – செலவு திட்டத் தைக் கூட சாதகமாக பயன்படுத்திகைதிகளின் விடுதலைக்கு முயற்சி செய்யாமல் அரசாங்கத்தின் வரவு – செலவுதிட்டங்களுக்கு ஆதரவாக தவறாமல் வருடா வருடம் வாக்களித்து வருகின்றார்கள். இவர்களின் மீதுநம்பிக்கை இழந்துள்ளநிலையிலேயே அரசியல் கைதிகளின் விடுதலைக் காக எமது பல்கலைக்கழக மாணவர்கள் தமது கற்றல்செயற்பாடு களையும் இடைநிறுத்தி வீதியில் இறங்கி போராடும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

**அரசுக்கு துணைபோகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

போர்க்குற்ற விசாரணைக்கான சர்வதேச மனித உரிமைகள் சபையின் கோரிக்கையை மேலும் பலப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தீர்மானங் களை அமுல் படுத்துவதற்கான காத்திரமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்க வில்லை. கால இழுத்தடிப்புக்களை மேற்கொள்ளும் அரசாங் கத்தின் நடவடிக்கைகளுக்குதமிழ் தேசியகூட்டமைப்புதுணைபோகின்றது என்பதுதான் யதார்த்தம்.

ஆகவே, இன்றைய நெருக்கடியானதும் இக் கட்டானதுமான காலகட்டத்தில் தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்தி சிந்திக்கும்போது, ஒரு மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்கி செயற்படும் நான்காவது தெரிவு அதிகாரமற்ற ஒரு இயக்கத்தின் வெறும் ஆதங்க வெளிப்பாடாகவே இருக்கும் என்று எனக்கு புரிந்துள்ளது. அதனால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவர் மக்கள் இயக்கமொன்றை நான் முன்னெடுத்துச் செல்வதைத் தாம் வரவேற்பதா கக் கூறியுள்ளார்.

**கட்சி ஆரம்பிப்பதே சரி**

எனவேதான் அரசியல் கட்சி ஒன்றை ஆரம் பித்து தமிழ் தேசிய கோட்பாடுகளின் பால் பற்று றுதியுடன் இருக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டை முன்னெடுக்கும் மூன்றாவது தெரிவே சிறந்ததும் அவசியமானதும் என்று உணர்கின்றேன். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் பல தமிழ் புத்திஜீவிகளும் தமிழ்த் தேசிய செயற் பாட்டாளர்களும் இது காலத்தின் அவசியம் என்றும் எனது கடமை என்றும் உணர்த்தியுள்ளமையுடன் தமது ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக, நான் சந்தித்த ஒட்டு மொத்த தமிழ் மக்களும் இந்த கோரிக்கையைத்தான் என்னிடம் விடுத்து வந்திருக்கின்றார்கள். ஆகவே நீங்கள் விரும்பியபடியே எனது அரசியல் பயணம் தொடரும். என்னை நம்பிய எனது மக்களுடன் இறுதிவரை வாழ்ந்து அவர்களுக் காகப் பணி செய்வது என்று முடிவுசெய்துள்ளேன். பதவியில் இருந்து தற்போது தற்காலிகமாக ஒதுங்கியிருப்பது எனது உடல் நிலையை வெகு வாக சீர்செய்யும் என்று எதிர்பார்க்கின்றேன்.

**கிழக்கு மக்களுக்கும் கூட பணியாற்றக் காத்திருக்கிறோம்**

வடமாகாண முதலமைச்சராக இருந்த காரணத்தினால் வரையறைகளுக்கு அமைவாக எனது செயற்பாடுகள் வட மாகாணத்துக்குள்ளாகவே மட்டுப்படுத் தப்பட்டிருந்தன. கிழக்கு மாகாண மக்களுக்கு எந்த உதவிகளையும் என்னால் செய்யமுடியவில்லை. உரிமைகளுக்கான எமது போராட்டத்துக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் செய்துள்ள தியாகம் மற்றும் காத்திரமான வகி பாகம் ஆகியவற்றை நான் அறிவேன். அவர்கள் இன்று சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்து வருவதையும் நான் அறிவேன். அங்குள்ள சமூக தலைவர்கள், செயற்பட்டாளர்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து தான் உருவாக்கவிருக்கும் புதிய அரசியல் கட்சியின் ஊடாகப் பணியாற்றுவதற்கு நான் உறுதி பூண்டுள்ளேன்.

**தமிழ் மக்கள் கூட்டணி**

தமிழ் மக்கள் பேரவையின் அனுசரணையுடன் ஓர் அரசியல் கட்சியை உருவாக்கும் நடவடிக்கைகளை நான் ஏற்கனவே ஆரம்பித்து விட்டேன். தமிழ்த் தேசிய கோட்பாடுகளின் வழி நின்று எமது இனத்தின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடுதலையை வென்றெடுத்து மேன்மையை அடைவதற்கு, மனித உரிமைகளை மதித்து நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றும் அனைவரையும் ஒரு குடையின் கீழ் சேர்க்க, இந்தக்கட்சிப்பயணம் உறுதுணையாக அமையும். இதற்கு 'தமிழ் மக்கள் கூட்டணி' (Thamizh Makkal Kootanii – TMK) என்ற காரணப் பெயரை இட்டுள்ளேன்.

என் அன்புக்குரிய மக்களே! இது எனது கட்சி அல்ல. இது உங்களின் கட்சி. நீங்கள் வளர்க்கப்போகும் கட்சி. காலத்தின் அவசியத்தால் உதய மாகும் கட்சி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கொள்கைகளுக்கு விசுவாசமாக இதுகாறும் நடந்திருந்தார்களேயானால் நான் ஓய்வு பெறப் போயிருப்பேன். ஒரு கட்சியை உருவாக்க என்னை கட்டாயப்படுத்தி விட்டார்கள் கூட்டமைப்பினர்! தமிழ் தேசிய கூட்டமைப்பை எந்த விதத்திலும் கூறு போட நான் விரும்பவில்லை. எனது குறிக் கோள்கள் சரி என்றால் மக்கள் என் பக்கம் சார் வார்கள். இல்லையேல் என்னை ஒதுக்கி விடுவார்கள். அது மக்களின் விருப்பம்.

எமது மக்களின் அரசியல், சமூக பொருளாதார மற்றும் கலாசார விடுதலைகளுக்கான 'மக்கள் அரசியலை' முன்னெடுக்கும் பொருட்டாக சில செயற்திட்ட முன்மொழிவுகளை இந்த சந்தர்ப்பதில் இறுதியாக முன்வைக்க விரும்புகின்றேன். இவை மேலும் ஆய்வுக்குட் படுத்தப்படவேண்டும், விவாதத்துக்கு உட்படுத்தப்படவேண்டும், உபா யங்கள் வகுக்கப்படவேண்டும். அவையாவன –

1. கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள், முன் கோபதாபங்கள், குரோதங்கள், விரோதங்கள் எல்லாவற்றையும் களைந்துவிட்டு தமிழ் தேசிய கோட்பாடுகளுக்கு அமைவாக இணைந்த வடக்கு கிழக்கில் பகிரப்பட்ட இறை யாண்மை அடிப்படையில் சமஷ்டி தீர்வு ஒன்றைக் காணும் எனது அரசியல் பயணத்தில் கைகோர்க்குமாறு அகத்திலும் புலத்திலும் உள்ள அனைவரையும் அழைத்து அரவணைத்து செயற்பட வேண்டும்.

2. இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை அக்கறையுடனும் இதய சுத்தியுடனும் பரிசீலிக்கும் எந்த அரசுடனும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு தீர்வை அடையப் பாடுபட வேண்டும்.

3. அரசாங்கத்துடன் தடைப்பட்டுப் போயுள்ள இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் பொருட்டு உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்தின் ஊடாகவும் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

4. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு குறுக்கு வழிகளை கையாளாமல் போர் குற்ற விசாரணை கள் மூலம் உண்மைகளை எமது சிங்களச் சகோ தர்களுக்கு தெரியப்படுத்தி பரஸ்பர அவநம்பிக் கைகள் மற்றும் அச்சங்களை நீக்கி நிலையான சமாதானம் ஏற்பட சகல வழிகளிலும் பாடுபடவேண்டும். இதற்காக சிங்கள புத்திஜீவிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சமூக மற்றும் மதத் தலைவர்கள் மற்றும் ஊட கங்களுடன் நெருக்கமாக செயற்பட வேண்டும்.

5. நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டின் மூலம் தனிப்பட்ட கட்சி நலன்களைப் புறந் தள்ளி மூலோ பாய திட்டமிடலுடனான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

6. அரசியலையும் அபிவிருத்தியையும் சம அளவில் சமாந்திரமாக கொண்டு செல்லும் நிறு வன மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

7. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக புலம்பெயர் மக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உலக நாடுகளின் உதவியுடன் சுயசார்பு பொருளாதார நடவடிக்கைகளை ஏற்படுத்தி மீண்டும் அவர்களுக்கு வளமான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்தும் பொருத்தமான ஒரு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

8. அரசியல் கைதிகள், காணமல் போனவர்கள் மற்றும் மக்களின் காணி விடுவிப்பு போன்றவற் றுக்கு சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் உதவிகளுடனும் அரசாங்கத் துடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமும் தீர்வு காணும் நடவடிக்கைகளை மேலெடுக்க வேண்டும்.

9. இறுதி யுத்தத்தில் நடைபெற்றது இன அழிப் புத் தான் என்று வட மாகாண சபையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தை வலுப்படுத்த, மேலும் ஆய்வுகளைச் செய்தும் தரவுகளைத் திரட்டியும் சர்வதேச ரீதியாக அதனை ஏற்றுக்கொள்ளச்செய்தல் வேண்டும். இதற்குக் காலம் கனிந்து வருகின்றது என்பதே என் கருத்து.

10. உலகம் முழுவதிலும் வாழ்கின்ற தமிழ் மக் களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி எமக்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பலமான ஓர் ஆதரவு சக்தியை உருவாக்க வேண் டும். எமது இனத்தின் இருப்பை உறுதிசெய்யும் எமது நியாயமான இந்த சுய பாதுகாப்பு போராட் டத்துக்கு புலம்பெயர் தமிழ் மக்கள் முக்கியமாக தமிழ்நாட்டில் வாழுகின்ற கோடிக்கணக்கான எமது மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களும், அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாழும் எம் தமிழ் மக்களும், சேர்ந்து அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியான ஒத்துழைப்பையும் ஆதரவையும் எமக்கு வழங்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பதில் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**மக்கள் ஆணையே மனசாட்சி**

மக்கள் தந்த ஆணைதான் எனது மன சாட்சியாக இதுவரை இருந்துவந்துள்ளது. அவர்கள் அளித்த வாக்குகள் தான் என் சக்தி. நம்பிக்கை யுடன் வாக்களித்த மக்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ என்னால் துரோகம் செய்ய முடியாது. இதனை என் பலம் என்பர் சிலர். சிலர் பலவீனம் என்பர். இது பலமா பலவீனமா என்பதை வரலாறு தீர்மானிக்கட்டும். ஒருபோதும் மக்கள் எனக்கு அளிக்கும் ஆணைக்கு விரோதமாக நடக்கமாட்டேன். மக்களின் ஆணைக்கு விரோத மாக நடந்துவிட்டு அதற்கு சாணக்கியம் என்றும் ராஜதந்திரம் என்றும் முகமூடிகளை அணிந்து கொள்ளமாட்டேன். எமது இனத்தின் வரலாறு எனக்கு வழிகாட்டும்.

எனதினிய தமிழ் மக்களே! அகவை எண்பதில் இன்று காலடி எடுத்து வைக்கும் இந்தவயோதிபனை உங்கள் சேவகனாக்க முன்வாருங்கள். புதிதாக உதயமாகும் உங்கள் கட்சியைக் கையாளத் தக்கதாக எம்மக்கள் ஒன்றுதிரள வேண்டும். இன்றுடன் அரசாங்கம் எனக்களித்த அதிகாரங்கள், சலுகைகள், சாா்பான அனுசரணைகள் யாவும் அரசாங்கத்தால் திரும்பப் பெறப்படுவன. இப்பொழுது நான் உங்கள் வீட்டுப்பிள்ளை. என்னை உரியவாறு உருவாக்குவது உங்கள் பொறுப்பு! என்னை வளர்த்த தமிழ் மக்கள் பேரவைக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன்.

# கைத்தொழிற்பேட்டை ஊழியர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 24

அச்சுவேலி மேற்கு கைத்தொழில் பேட்டை ஊழியர்கள் அடிப்படை வசதிகோரி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை இன்று வியாழக்கிழமை மேற்கொள்ளவுள்ளனர்.

தண்ணீர், மின்சாரம் ,வீதி புனரமைப்பு போன்ற அடிப்படை வசதிகளை வழங்குமாறு கோரியே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டம் அச்சுவேலி – சங்கானை வீதியில் இருந்து தொடங்கி இராச வீதி வழியாகக் கைத்தொழில் பேட்டையில் நிறைவுபெற்று கோப்பாய் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும்.

அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டையில் 5 கைத்தொழிற்சாலைகள் இயங்குகின்றன. 2 தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வரும் நிலையில் இந்த தொழிற்பேட்டைக்குச் செல்லும் வீதி 50 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்பின்றிக் காணப்படுகிறது.

அந்தப் பிரதேசம் தண்ணீர், மின்சார வசதியின்றி உள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ஐ-07)

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் பத்து மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'எங்கள் குருதி அட்டைக்கு; எங்கள் உழைப்பு அரசுக்கு', 'அதிகரித்த விலையிலும் அரை குறைச் சம்பளமா?', 'ஏழை மக்களை ஒடுக்காதே அரசே', 'வழங்கு வழங்கு ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளம் வழங்கு', 'சுரண்டாதே சுரண்டாதே எங்களது உழைப்பைச் சுரண்டாதே', 'அரசே நீ என்ன தோட்ட முதலாளியின் தூதுவரா?',' சலுகைகளைக் கேட்கவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியத்தையே கேட்கிறோம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தப்போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் தமிழரசுக் கட்சியின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-100)

## விக்கியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகித் தனியாகப் பயணித்தால் அவரது தலைமையில் இணைந்து பயணிக்கத் தயார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னர் அறிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்று நல்லூரில் வைத்து முன்னாள் முதலமைச்சர் தமிழ் மக்கள் கூட்டணி என்ற தனது கட்சியைப் பகிரங்கமாக அறிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். பங்குபற்றியிருந்தபோதும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை, ஈ.பி.ஆர்.எல்.எவ். விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சியில் இணைந்துகொள்வது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் உடன்பாடற்ற தன்மை காணப்பட்டது. அதனை அந்தக் கட்சி பகிரங்கமாகவே கூறியிருந்த நிலையில், நேற்று விக்னேஸ்வரனின் புதிய கட்சிஅறிவிக்கும் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்துகொள்ளாமை சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விக்னேஸ்வரனின் கட்சியில் இணைந்துகொள்வதற்கு மறுப்பு தெரிவித்துள்ளதாகவும், கட்சியில் இணைந்து கொள்வதற்கு அது நிபந்தனைகளை விதித்தாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## ஆவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவா குழுவை இல்லாமல் செய்ய முடியும் என்றால் ஏன் அதனை அரசு ஆளுநர் ஊடாகக் கடந்த 5 வருடங்களில் செய்யவில்லை? அல்லது ஆளுநருக்கும் அரசுக்கும் ஆவா குழுவுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா? என்ற கேள்வி தவிர்க்கமுடியாமல் எழுகின்றது.

– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் பேரவையின் சிறப்புக் கூட்டம் நல்லூர் நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் சிறப்புரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவரது உரையின் ஒரு பகுதி வருமாறு:-

ஒரு புறம் வட மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்து வந்த அதேவேளை, மறுபுறம் சிங்களக் குடியேற்றத் திட்டங்களையும் பௌத்த மயமாக்கலையும் தமிழ் மக்களின் கடும் எதிர்ப்புக்கள் மத்தியிலும் நல்லாட்சி அரசு முன்னெடுத்து வந்துள்ளது. இதற்கு ஆளுநர் உடந்தையாக இருந்துள்ளார்.

இராணுவத்தை வடக்கில் இருந்து அகற்ற மறுத்து வருவதுடன், போதைப்பொருள் கடத்தல் மற்றும் வன்முறை கும்பல்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதிலும் அசட்டையீனமாக இருந்துவருகிறனர் அரசும் ஆளுநரும் – என்றார். (ஐ-07)

## சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அனுராதபுரத்தில் இருந்து வாரியபோல நோக்கிப் பயணம் செய்த சிறைச்சாலை பஸ்ஸுடன் எதிராக வந்த வான் கடுமையாக மோதியமையால் விபத்து ஏற்பட்டது.

வானில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வானில் பயணம் செய்த மேலும் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் குருநாகல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தலைமைகளை வைத்தும் சாதித்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.

தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதியகட்சிநேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த தேர்தல்களில் தமிழர்களின் வாக்களிப்பு முறையானது தமிழ் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளுக்கும், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை நிகழ்ச்சி நிரலிற்கு எதிராகவும் ஓர் செய்தியைச் சொல்லும் விடயமாகவே இருந்துள்ளது.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இடம்பெறும் தேர்தல்களில் தமிழ் மக்கள் என்ன கொள்கையில் நிற்கின்றார்கள் என்பது அல்லது ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் என்ன நிகழ்ச்சி நிரலை வைத்திருக்கின்றார்கள் என்பது முக்கியமான விடயமாகும்.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தென்னிலங்கை அரசின் தமிழ் அரசியல் தொடர்பான நிகழ்ச்சி நிரலானது தமிழ்த் தேசிய சிந்தனை அகற்றல் எனும் பத்தத்தினூடாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தநிலையிலேயே கடந்த அரசு தமிழ்த் தேசிய சிந்தனை அகற்றலை ஒடுக்குமுறைகளாலும், இப்போதைய அரசு தமிழ்த்தலைமைகளை வைத்தும் செயற்படுத்துகின்றது.

தென்னிலங்கையின் மிதவாத அரசியல் போக்கில் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய தமக்கான அரசியல் அபிலாஷைகளைப் படிப்படியாகப் பெற்றுக் கொள்ள முடியுமெனத் தமிழ்த் தலைமைகள் கூறி வருகின்றனர்.

ஆனாலும் இதன் இறுதிக் கட்டத்தில் கூடத் தமிழர்களுக்குச் சிங்களப் பௌத்த பேரினவாதம் எதனையும் வழங்கத் தயாராக இல்லைஎன்பதே உண்மை – என்றார். (ஐ-07)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் மோதியமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்காகச் சர்வதேச உண்மைகள் மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூகா முன்வைத்த குற்றச்சாட்டுகளே இராணுவ அதிகாரியைத் திருப்பி அழைக்கு மாறு ஐ.நா. விடுத்துள்ள வேண்டுகோளுக்கு காரணம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எங்கள் இராணுவ அதிகாரியை விலக்கிக்கொள்ளுமாறு எங்கள் மனித உரிமை ஆணைக் குழுவே வேண்டுகோள் விடுத்திருந்தால் அது துரதிஷ்டவசமானது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு முன்வைத்த குற்றச்சாட்டுகளே இராணுவ அதிகாரி தொடர்பான சர்ச்சைக்கு காரணம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார் எனவும் கூறப்பட்டது. (ஐ)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி 11ஆம் திகதி கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த வடிவேலு பாக்கியசாமி மற்றும் லோகநாதன் பரமானந்தம் ஆகிய இருவர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். கொழும்பு மாநகர சபை ஊழியர்களான அவர்கள் வத்தளைப் பகுதியில் வாகனமொன்றில் பயணித்த போது கட்டத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களிடமிருந்து 16 பவுண் நகைகள் மற்றும் 8 லட்சம் ரூபா பணம் என்பன கடத்தல்காரர்களால் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அப்போது முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. கடத்தப்பட்ட இருவரும் பயணித்த வான், வெலிசறைக் கடற்படை முகாமுக்குள் 72 துண்டுகளாக மீட்கப்பட்டது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னர் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

அந்த சம்பவம் தொடர்பாக வாக்குமூலமளிக்கக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருகை தருமாறு லெப்டினன்ட் கொமாண்டர் சம்பத் தயானந்த அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் வாக்குமூலமளிக்கச் சென்றபோதே குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

## விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது அரசியல் எதிர்காலம் குறித்து நேற்று முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிடுவார் முன்னாள் முதலமைச்சர் விக்கி ஏற்கனவே கூறியிருந்தார். அவர் இணைத் தலைவராக பதவி வகிக்கும் தமிழ் மக்கள் பேரவையின் சிறப்புக் கூட்டம் நல்லூர் நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே விக்னேஸ்வரன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இது குறித்து அவர் கூறுகையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நான் தேர்தலில் நிற்பது சாத்தியமில்லை. தமிழ் மக்கள் பேரவையைத் தலைமையேற்று முன்னெடுப்பதும் பொருத்தமற்றது. எனவேதான் தமிழ் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்து தமிழ் தேசியத்தின்பால் பற்றுறுதி உள்ளோரை ஒன்றிணைத்துச் செல்வதே பொருத்தம். தமிழ் மக்கள் விரும்பிய படியே அரசியலில் பயணிப்பேன்.

தமிழ் மக்கள் பேரவையின் அனுசரணையுடன் ஒரு அரசியல் கட்சியை உருவாக்கும் நடவடிக்கைகளை நான் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டேன். தமிழ்த் தேசிய கோட்பாடுகளின் வழிநின்று எமது இனத்தின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடுதலையை வென்றெடுத்து மேன்மையை அடைவதற்கு, மனித உரிமைகளை மதித்து நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றும் அனைவரையும் ஒரு குடையின் கீழ் சேர்க்க, இந்தக் கட்சிப் பயணம் உறுதுணையாக அமையும். இதற்கு தமிழ் மக்கள் கூட்டணி (Tamil Makkal Kuttani) என்ற காரணப் பெயரை இட்டுள்ளேன்.

என் அன்புக்குரிய மக்களே! இது எனது கட்சி அல்ல. இது உங்களின் கட்சி. நீங்கள் வளர்க்கப்போகும் கட்சி. காலத்தின் அவசியத்தால் உதயமாகும் கட்சி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கொள்கைகளுக்கு விசுவாசமாக இதுகாறும் நடந்திருந்தார்களேயானால் நான் ஓய்வு பெறப் போயிருப்பேன். ஒரு கட்சியை உருவாக்க என்னைக் கட்டாயப்படுத்திவிட்டார்கள் கூட்டமைப்பினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்த விதத்திலும் கூறுபோட நான் விரும்பவில்லை. எனது குறிக்கோள்கள் சரி என்றால் மக்கள் என் பக்கம் சார்வார்கள். இல்லையேல் என்னை ஒதுக்கி விடுவார்கள். அது மக்களின் விருப்பம்.

எனதினிய தமிழ் மக்களே! அகவை எண்பதில் இன்று காலடி எடுத்து வைக்கும் இந்த வயோதிபனை உங்கள் சேவகனாக்க முன்வாருங்கள். புதிதாக உதயமாகும் உங்கள் கட்சியைக் கையாள கனத்த எம் மக்கள் ஒன்றுதிரள வேண்டும். இன்றுடன் அரசு எனக்களித்த அதிகாரங்கள், சலுகைகள், சார்பான அனுசரணைகள் யாவும் அரசால் திரும்பப் பெறப்படுவன. இப்பொழுது நான் உங்கள் வீட்டுப் பிள்ளை. என்னை உரியவாறு உருவாக்குவது உங்கள் பொறுப்பு! என்னை வளர்த்த தமிழ் மக்கள் பேரவைக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்– என்றார்.

நேற்றைய கூட்டத்திற்குப் பல நூற்றுக்கணக்கில் ஆதரவாளர்கள் திரண்டு வந்து பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

*(விக்னேஸ்வரனின் உரையின் முழு வடிவம் 6ஆம், 7ஆம், 10 ஆம் பக்கங்களில்)*

## மழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பழைய பூங்கா வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், அப்பகுதியால் இணைப்பு வழங்கப்பட்ட மின்சார மற்றும் தொலைபேசி இணைப்பு வயர்களும் சேதமடைந்தன.

அந்த மரத்தை அப்புறப்படுத்தும் பணிகளை மின்சார சபையின் வடபிராந்திய அதிகாரிகள் முன்னெடுத்தனர். (ஐ)





காரைநகர் பிரதேசசபையின் கசூரினா சுற்றுலா மையத்தில், வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் அமைக்கப்பட்ட அம்மாச்சி உணவகக் கட்டடத் திறப்பு விழா நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. அச்சமயம் வடக்கு முதலமைச்சராக இருந்த நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கட்டடத்தை திறந்து வைத்தார்.

# ஜெனீவா தீர்மானத்திலிருந்து அரசு உடன் விலகவேண்டும்

## சம்பிக்க ரணவக்க போர்க்கொடி



**கொழும்பு, ஒக்ரோபர் 25**

**ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து விலகுவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், தேசிய உண்மை ஆணைக்குழுவை ஏற்படுத்துவதற்கான சட்டவரைவு குறித்து ஆராய்ந்தவேளையே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – இலங்கை அரசு தான் இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்திலிருந்து விலகுவதற்கான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நல்லாட்சி அரசு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எனினும் ஏனைய தரப்பிலிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இலங்கை அரசின் தற்போதைய அணுகுமுறை காரணமாக பிரிட்டன் உட்பட சில நாடுகள் விடுதலைப்புலிகளுக்கு அனுதாபமான விதத்தில் செயற்படுகின்றன. ஐ.நா. தீர்மானங்களை நீக்கிக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்காவிடின், அரசு முன்னெடுத்து வரும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் ஆதரவு வழங்கப் போவதில்லை – என்றார். (ஐ)

# மைத்திரி - ரணில் இணைப்பு நீடிப்பின் நாடு முன்னேறும்

## அமைச்சர் அர்ஜுன கூறுகிறார்



கொழும்பு, ஒக். 25

பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோ, டி.எஸ்.சேனாநாயக்கவின் ஐக்கிய தேசியக்கட்சியோ தற்போது இல்லை என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட விடயம். மைத்திரி – ரணில் ஆட்சி தொடர்ந்தால் நாடு முன்னேற்றம் காணும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க.

பேலியகொடை மீகஹாவத்தை ஸ்ரீ தர்மாராம விகாரையில் நேற்று தாய்நாட்டு இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மிகப் பெரிய பொறுப்புள்ளது. இவர்கள் பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். இன்னும் ஒன்றரை வருடங்கள் இவர்கள் இருவரும் இணைந்து பணியாற்றினால், நாட்டை மேலும் முன்னேற்ற முடியும்.

எனினும் இவர்களின் இணைப்பை உடைக்கச் சில அரசியல்வாதிகள் முயற்சித்து வருகின்றனர். அரசியல்வாதிகள் எப்போதும் அதிகாரத்திற்கு வரவே முயற்சிப்பார்கள்.

பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தற்போது இல்லை. அதேபோல் டி.எஸ்.சேனாநாயக்கவின் ஐக்கிய தேசியக்கட்சியும் தற்போது இல்லை. காலத்திற்கு காலம் கட்சிகளில் மாற்றங்கள் ஏற்படும்.

இதனை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும் ஆரம்பகால நோக்கங்களுடன் அனைத்து கட்சிகளும் முன்னோக்கி செல்வது முக்கியமானது. – என்றார். (ஐ)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது

அம்பாறை, ஒக். 25

தென்கிழக்கு பல்கலைக்கழகம் நேற்று மாலை 4 மணியில் இருந்து காலவரையறையின்றி மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் சிலருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழில்நுட்பப் பிரிவு மாணவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடத்தை கடந்த இரு வாரங்களாக முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துகின்றனர்.

இதனால் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்படுவதாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எச்.எல். அப்துல் சத்தார் அறிவித்தார்.

பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களையும் நேற்று மாலை 4 மணிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறவேண்டும் எனப் பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்தது. (ஐ)

# திடீரென வெடித்து சிதறிய கொள்கலன்



கொழும்பு, ஒக். 25

கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் ஒன்று திடீரென வெடித்து சிதறியதால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்தியாவில் இருந்து கடந்த 3 நாள்களுக்கு முன்னர் இலங்கைக்கு கொண்டுவந்த இரசாயனப் பொருள்கள் அடங்கிய கொள்கலனே இவ்வாறு வெடித்துள்ளதாகத் துறைமுகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் கொள்கலன் பங்களாதேஷுக்கு அனுப்புவதற்கு தயாராக இருந்த நிலையில் திடீரென வெடித்துச் சிதறியுள்ளது.

இந்தக் கொள்கலன் இருந்த வாகனத்தை ஓட்டிய சாரதி அதிர்ச்சியடைந்த நிலையில் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

# துவக்குச் சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு, ஒக். 25

வீரகெட்டிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீரகெட்டிய – உடயாய பகுதியில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

வீரகெட்டிய –ஹுகுருவெல பகுதியை சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பழைய பிரச்சினை ஒன்றின் காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் அதே பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# இலங்கை முதலீட்டுச் சபை புதிய தலைவராக ஹேமசிறி

கொழும்பு, ஒக். 25

இலங்கை முதலீட்டு சபையின் புதிய தலைவராக ஹேமசிறி பெர்னாண்டோ நேற்றுப் புதன்கிழமை நியமிக்கப்பட்டார்.

கடந்த 17 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், இரண்டு அரச வங்கிகள் மற்றும் முதலீட்டுச் சபைகளின் பணிப்பாளர் சபைகளைக் கலைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் கவனம் செலுத்தியே இவற்றின் பணிப்பாளர் சபைகளைக் கலைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முதலீட்டுச் சபையின் புதிய தலைவராக ஹேமசிறி பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.